தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**19.06.2013 A.M**

---

## 21-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

விழுப்புரம் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க் கூட்டம் வரும் 21-ம் தேதி நடைபெறுகிறது.

இது குறித்து மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் வெளியிட்ட அறிக்கை:

ஜூன் 2013-ம் மாதத்தின் விவசாயிகள் குறைதீர்ப்பு நாள் கூட்டம் வரும் ஜூன் 21-ம் தேதி நடைபெற உள்ளது. மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெறும் இக் கூட்டத்தில் விவசாயிகளும், விவசாய சங்க பிரதிநிதிகளும் பங்கேற்று பயனடையலாம் என்றார்.

## மழை இல்லாததால் குதிரையாறு அணைப் பகுதியில்

பருவ மழை, கோடை மழை பொய்த்ததால், பழனி குதிரையாறு அணை அருகே விவசாயப் பரப்பு குறைந்ததோடு, தேன் சேகரிப்பும் வெகுவாகக் குறைந்துள்ளது.

விவசாயிகளின் நண்பனாக விளங்குவது தேனீ. மரம், செடிகளில் பூக்கும் பூக்களில் இருந்து தேனீக்கள் சேகரம் செய்யும் தேன், அரிய சத்துமிக்க ஒன்றாகவும், அருமருந்தாகவும் திகழ்கிறது.

உலக அளவில் தேனின் பயன்பாடு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. மலைத் தேனீ, கொம்புத் தேனீ, பொந்துத் தேனீ, கொசுத் தேனீ என பரவலாக நான்கு வகை தேனீக்கள் காணப்படுகின்றன. இவை சேகரிக்கும் தேன் முறையே

மலைத் தேன், கொம்புத் தேன், பொந்துத் தேனீ தேன், கொசுத் தேன் எனவும் அழைக்கப்படுகிறது.

பழனியைச் சுற்றி ஏராளமான அணைகள் உள்ளன. இந்த அணைகளில் பல பகுதிகளிலும் தேனீக்கள் கூடு கட்டுவதால், மலைவாழ் மக்கள், குறவர்கள் ஆகியோர் தேன் எடுக்கும் தொழில் செய்து வருகின்றனர்.

சமீபமாக, பழனி மற்றும் கொடைக்கானல் மலைப் பகுதிகளில் பருவமழையும், கோடை மழையும் பொய்த்ததால், கடும் வறட்சி நிலவுகிறது. குடிநீருக்கே பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கிராமங்களிலும் மழையில்லாததால் கிணறுகள் வறண்டு போயுள்ளன. அணைகளிலும் தண்ணீர் குட்டைபோல காட்சியளிக்கிறது. ஆயிரக்கணக்கான ஏக்கரில் செய்யப்பட்டு வந்த பயிர் சாகுபடி, தற்போது சில நூறு ஏக்கராக சுருங்கியுள்ளது.

மழை இல்லாததால், காய்கறிகள் விலை உயர்வு, அரிசி விலை உயர்வு என்று மட்டுமே மக்கள் அறியும் நிலையில், தேனீக்களும் பெருவாரியாக தங்களது இடங்களை மாற்றியதால், தேனுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பழனி மலைக் காடுகள் பாதுகாப்பு அமைப்பு சார்பில், பழனி குதிரையாறு அணை அருகே தேன் வளர்ப்பு மற்றும் தேன் சேகரிப்பு மையம் இயங்கி வருகிறது. இங்கு ஏராளமான தேன் கூடுகள் வைக்கப்பட்டு, தேனீக்கள் வளர்க்கப்பட்டன. இந்நிலையில், தற்போது விவசாயப் பரப்பு குறைந்ததால், தேனீக்கள் தேன் சேகரிக்க முடியாமல் போனது. எனவே, தேன் கூடுகள் கொடைக்கானலுக்கு கொண்டு செல்லப்பட்டு விட்டன. தற்போது, இங்கு கொசுத் தேன் கூடுகள் மட்டுமே பராமரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து, வனஆர்வலரும், அமைப்பின் கண்காணிப்பாளருமான ஆனந்த் கூறியது:

முன்பு, அதிக பரப்பில் விவசாயம் செய்யப்பட்டதால், தேனீக்களும் ஏராளமாக வளர்க்கப்பட்டன. தேனீக்கள் தேன் சேகரிக்க செடிகள், பூக்கள், பசுமை நிறைந்த தோட்டங்கள் என இருந்தன. எனவே, அதிக அளவு தேன் சேகரிக்கப்பட்டது.

தற்போது, தேனீக்களை வளர்க்கவோ, தேன் சேகரிக்கவோ போதிய விவசாயப் பரப்பு இல்லாததால், தேனீக்கள் பலவற்றையும் கொடைக்கானல் கொண்டு சென்றுவிட்டோம். முன்னர், மாதந்தோறும் பல லிட்டர் தேன் சேகரம் செய்தோம். தரமான தேன் கிலோ ரூ. 200 முதல் ரூ. 300 வரை விற்பனை செய்தோம். ஆனால், தற்போது தேன் மிகவும் குறைந்துவிட்டது.

கொசுத் தேன் மட்டுமே வளர்க்கிறோம். அது சேகரிக்கும் தேனை விற்பதில்லை. ஏனென்றால், அந்த இனம் வளர்வதற்காக அப்படியே விட்டு விடுகிறோம். மேலும், தேனிலேயே கொசுத் தேன்தான் மிகவும் அற்புத மருத்துவ குணம் வாய்ந்தது. எனவே, மிகவும் அவசியம் என கேட்பவர்களுக்கு மட்டுமே 100 மில்லி என்ற அளவில் வழங்குகிறோம்.

இந்நிலையில், விவசாயிகளும் நாளுக்கு நாள் அதிகளவில் ரசாயன உரங்களை பயன்படுத்தி வருகின்றனர். இதனால், தேனீக்கள் இனம் அழியும் நிலை ஏற்பட்டுள்ளது. விவசாயிகளின் தோழனான தேனீ மட்டுமின்றி, பட்டுப் பூச்சிகள், பல்வேறு இன வண்டுகளும் அழிந்து வருகின்றன. இதை உணர்ந்து, விவசாயிகள் இயற்கை விவசாயத்துக்கு மாறாவிடில், விரைவில் பல்வேறு பூச்சி இனங்கள் அழிவதோடு,விவசாயமும் அழியும் நிலை ஏற்படும் என்றார்.

## சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க விண்ணப்பிக்கலாம்

விருதுநகர் மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறை சார்பில் மானியத்தில் சொட்டு நீர்ப் பாசனம் அமைப்பதற்கு சிறு, குறு விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக மாவட்ட ஆட்சியர் டி.என். ஹரிஹரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் டி.என். ஹரிஹரன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தேசிய நுண்ணீர் பாசனத் திட்டத்தின் சார்பில் சொட்டு நீர்ப் பாசனம், தெளிப்பு நீர்ப் பாசனம் அமைப்பதற்கு தோட்டக் கலை பயிர்களுக்கு சிறு, குறு விவசாயிகளின் நிலங்களில் 600 ஹெக்டேர் வரையில் இலவசமாகவும், இதர விவசாயிகளுக்கு 10 ஹெக்டேர் வரையிலும் 75 சதவீதம் வரை மானியம் வழங்கப்படுகிறது. வேளாண்மை துறை சார்பில் வேளாண்மை பயிர்களுக்கு 352 ஹெக்டேர் வரை இலவசமாக வழங்கப்படுகிறது.

எனவே பாசன நீரை சிக்கனமாகச் செயல்படுத்தவும், நீர் பாய்ச்சும் பரப்பை அதிகப்படுத்தியும், அதோடு விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயரும் என்பதற்காக சொட்டு நீர்ப் பாசனம் அமைப்பது அவசியமாகிறது. அதிலும், குறிப்பாக மா, கொய்யா, சப்போட்டா, நெல்லி, எலுமிச்சை, வாழை, காய்கறி வகைகள், மலர்கள்,  மருத்துவப் பயிர்கள், தென்னை, கரும்பு, எண்ணெய் வித்து பயிர்கள், சிறுதானியங்கள் மற்றும் பயறு வகைகள் ஆகியவைகளில் சொட்டு நீர்ப் பாசனம் அமைக்கலாம்.

இந்த வகையில் சொட்டு நீர்ப்பாசனம் அமைப்பதற்கு போதுமான நீர் ஆதாரம் இருக்க வேண்டும். சிறு விவசாயிகளுக்கு அதிகபட்சமாக 5 ஏக்கர் வரையிலும், குறு விவசாயிகளுக்கு குறைந்தபட்சம் 2.5 ஏக்கர் பரப்பளவிலும் மற்றும் இதர விவசாயிகள் 12.5 ஏக்கர் பரப்பளவிலும் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்கலாம்.

இதில், சிறு குறு விவசாயிகளுக்கு அதிகபட்சமாக ரூ. 1.85 லட்சம் வரை முழு மானியம் வழங்கப்படுகிறது. அதேபோல் இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தில் சொட்டு நீர்ப்பாசனம் அமைப்பதற்கு அதிக பட்சமாக ரூ. 3.55 லட்சம் வரை மானியம் வழங்கப்படுகிறது. எனவே விவசாயிகள் சொட்டு நீர்ப்பாசனம் அமைப்பதற்கு சிறு, குறு விவசாயிகளுக்கான சான்றிதழை வட்டாட்சியரிடம் பெற்றிருக்க வேண்டும்.

அதோடு, கணிப்பொறி சிட்டா, கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து பெறப்பட்ட பயிர் அடங்கல் சான்று, நிலத்தின் வரைபடம், குடும்ப அட்டை நகல்,

பயனாளியின் புகைப்படம், இதர விவசாயிகளுக்கான 75 சதவீத மானியம் நீங்கலாக 25 சதவீத பங்குத் தொகைக்கான காசோலை ஆகியவைகளுடன் விண்ணப்பம் செய்ய வேண்டும். மேற்குறிப்பிட்டுள்ள ஆவணங்களுடன் தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையால் அங்கீகாரம் செய்யப்பட்ட சொட்டு நீர்ப்பாசன நிறுவனத்திடமிருந்து பெற்ற மதிப்பீட்டு பட்டியல் ஆகியவற்றுடன் அந்தந்த பகுதி வட்டார தோட்டக்கலை அலுவலர்களிடம் விண்ணப்பம் செய்ய வேண்டும்.

தகுதியான விண்ணப்பங்கள் பரிசீலனை செய்து 10 நாள்களுக்குள் இணை இயக்குநரால் சொட்டு நீர்ப் பாசன நிறுவனங்களுக்கு பணி உத்தரவு வழங்கப்படும். பணி உத்தரவு பெற்ற 7 நாள்களுக்குள் விவசாயிகள் தங்கள் நிலத்தில் சொட்டு நீர்ப்பாசனம் அமைப்பதற்கான குழிகளை எடுத்தல் மற்றும் இதர வேலைகளை முடித்திருக்க வேண்டும். இப்பணிகள் அனைத்தும் முடிந்தவுடன் 15 நாள்களுக்குள் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மூலம் சொட்டு நீர்ப் பாசனம் நிறுவப்படும்.

மேலும், நிறுவிய பின் 3 ஆண்டுகளுக்குள் பழுது ஏற்பட்டால் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் மூலம் இலவசமாக சேவை அளிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை விவசாயிகள் அனைவரும் பயன்படுத்தி, சொட்டு நீர்ப் பாசனம் அமைப்பதற்கு அந்தந்த பகுதி வட்டார தோட்டக்கலை அலுவலர்களை அணுகி பயனடையுமாறு மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 43.74 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 43.74 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 5,386 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 200 கன அடி நீர்

திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 3.11 டி.எம்.சி.

## வறட்சியால் கருகியதென்னை மரங்களுக்கு நிவாரணம் வழங்கக் கோரிக்கை

வறட்சியால் கருகிய தென்னை மரங்களுக்கு ரூ.5,000 நிவாரணம் வழங்க வேண்டும் என்று, கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சியின் தலைமை நிலையச் செயலர் சூரியமூர்த்தி கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் செவ்வாய்க்கிழமை விடுத்த அறிக்கை:   வறட்சிக் காலங்களில் விவசாயிகளுக்கு ஓரளவு சொற்ப வருமானம் தருவது தென்னை மரங்கள் தான். ஆனால், என்றும் இல்லாத அளவுக்கு தற்போது வறட்சி நிலவி வருவதால் 80 சதவீத மரங்கள் முற்றிலுமாக காய்ந்துவிட்டன. இதனால் எந்தவித வருமானமும் இன்றி விவசாயிகள் சிரமப்படுகின்றனர்.

வறட்சியால் காய்ந்துள்ள மரங்களை மாவட்ட நிர்வாகம் கணக்கிட்டு, மரம் ஒன்றுக்கு ரூ.5,000 வீதம் இழப்பீடு தொகை வழங்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் தற்போது அரசால் வழங்கப்பட்டுவரும் வறட்சி நிவாரணத் தொகையை அதிகரிக்க வேண்டும்.

## கடும் வறட்சியால் கருகிய வாழைகள்!

கோபி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் போதிய மழை இல்லாததால், வாழைப் பயிர் கருகியது.

மழையின்மையால் ஓராண்டாக நிலவி வரும் வறட்சியால் பவானிசாகர் அணையிலிருந்து தடப்பள்ளி, அரக்கன்கோட்டை வாய்க்காலில் 9 மாதங்களாக பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிடப்படவில்லை. இதனால், கோபி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் பெரும்பாலான விவசாயிகள் விளைநிலங்களை தரிசாக வைத்துள்ளனர்.

கிணறு, போர்வெல் வசதி பெற்றுள்ள சில விவசாயிகள் மட்டுமே தங்களது வயல்களில் வாழை, மஞ்சள் உள்ளிட்ட பயிர்களை பயிரிட்டுள்ளனர். தற்போது நிலவும் வறட்சியால் கிணறுகள், போர்வெல்கள் தண்ணீரின்றி வறண்டு காணப்படுகிறது.

இதனால் ஒத்தக்குதிரை உள்ளிட்ட பகுதிகளில் 25 ஆண்டுகள் நன்கு வளர்ந்த தென்னை மரங்களும் கருகிவிட்டன. இந்நிலையில் கோபி, கூகலூர் அருகே தாழக்கொம்புபுதூர் என்ற இடத்தில் விவசாயி வீராசாமி என்பவர் தனது தோட்டத்தில் ரஸ்தாளி ரக வாழையை பயிரிட்டிருந்தார். கிணற்றில் இருக்கின்ற நீரைப் பயன்படுத்தி வாழையை வளர்த்து விடலாம் என்று நினைத்திருந்தார்.

இந்நிலையில் 7 மாதங்கள் விளைந்த நிலையில், போதிய தண்ணீர் இன்றி வாழை இலைகள் கருகிவிட்டன. கிணற்றிலும் தண்ணீர் இல்லை; பருவமழையும் பொய்த்துவிட்டது. இதன்பின்னர் மழை பெய்தாலும் ரஸ்தாளி ரக வாழையை பிழைக்க வைக்க முடியாத சூழ்நிலை உள்ளது.

இதேபோல் மற்ற பகுதிகளில் விவசாயிகள் தாங்கள் விளைவித்த விளைபயிர்கள் அறுவடை செய்வதற்கு முன்னரே, வறட்சி காரணமாக சேதமடைந்துவிட்டதாக கூறினர்.

## மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பேரணி

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூரில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பேரணி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

பர்கூர் பேரூராட்சி சார்பில் நடைபெற்ற பேரணியை பேரூராட்சித் தலைவர் சுமதி ராஜேந்திரன் தொடக்கிவைத்தார். செயல் அலுவலர் கணேஷ் முன்னிலை வகித்தார். இதில் பேரூராட்சி பணியாளர்கள், அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி மாணவிகள் கலந்து கொண்டனர்.

பேரணி  பேரூராட்சி அலுவலகம் முன் தொடங்கிய பேரணி நகரின் முக்கிய வீதிகள் வழியாக சென்றது.

## ஜூன் 21-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை (ஜூன் 21) நடைபெற உள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் எம். ரவிக்குமார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு, ஆட்சியர் எம். ரவிக்குமார் தலைமையில் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் நீர்ப்பாசனம், கடன் உதவிகள், இடுபொருள்கள், இயந்திரங்கள் மற்றும் விவசாயிகளின் மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

எனவே, இந்த கூட்டத்தில் அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் பங்கேற்று பயன்பெறலாம் என்று அந்த செய்திக்  குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## மழை நீர் சேகரிப்புத் திட்டம் மீண்டும் எழுச்சி பெறுமா?

புதுக்கோட்டை மாவட்டத்தில் முடங்கிய நிலையில் உள்ள மழை நீர் சேகரிப்புத் திட்டத்தை முடுக்கி விட வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது.

உயிரினங்களுக்கு அத்தியாவசியமான நீரின் முதல் ஆதாரம் மழை. மழை நீரில் 50 சதம் ஆறு, குளங்கள், ஊருணிகள், ஏரிகள் போன்றவை மூலம் சேமிக்கப்படுகிறது. மீதமுள்ள 30 சத நீர் நிலத்தின் மேற்பரப்பில் வழிந்தோடி கடலில் கலந்து வீணாகிறது. இந்த நீரை ஏதேனும் ஒரு வகையில் சேமிப்பதே மழை நீர் சேமிப்பு.

இந்நிலையில், கடந்த 2001-06 -வரை தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதா மழை நீர் சேகரிப்புத் திட்டத்தை அறிவித்தார். இதையடுத்து ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் துறைகளின் சார்பில் மழை நீர் சேகரிப்பு அமைப்புகளை அமைப்பது கட்டாயமாக்கப்பட்டது.

வனத் துறையில் உள்ள சமுதாய மற்றும் இதர வனப்பகுதிகளில் தடுப்பணைகள், நீர் தேக்கும் குழிகள் அமைக்கப்பட்டன. மேலும், நெற்களங்களில், அடுக்குமாடி வீடுகள், அரசு அலுவலகங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், பல்வேறு அரசுத்துறை சார்ந்த அலுவலகக் கட்டடங்கள் மற்றும் பள்ளிகளிலும் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

மேலும், மழை நீர் சேமிப்பின் அவசியம், மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் பற்றி விளக்கும் வகையில் ஆட்சியரகத்தில் கடந்த 2003-ல் மழைப் பூங்கா அமைக்கப்பட்டது. அடிக்கடி ஆட்சியரகத்துக்கு வந்த பொதுமக்கள் அந்த மழைப் பூங்காவைப் பார்வையிட்டதால் மழை நீர் சேகரிப்பு விழிப்புணர்வு பரவலாகியது என்றால் மிகையில்லை.

ஆனால், தற்போது இந்த மழை நீர் பூங்கா போதிய பராமரிப்பின்றி பயனற்ற நிலைக்குச் சென்றுவிட்டது. இதற்கு கடந்த 2006-2011 வரை நடைபெற்ற திமுக ஆட்சியில் மழை நீர் சேகரிக்கும் திட்டத்தில் போதிய கவனம் செலுத்தாததே காரணம் எனக் குற்றம்சாட்டுகின்றனர் இயற்கை ஆர்வலர்கள்.

இந்நிலையில், தற்போது மீண்டும் ஆட்சி நடத்திவரும் முதல்வர் ஜெயலலிதா முடங்கிப்போயுள்ள மழை நீர் சேகரிப்புத் திட்டத்தை மீண்டும் முழு வீச்சில் முடுக்கிவிட வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

இதுகுறித்து இயற்கை விவசாயி ஜி.எஸ். தனபதி கூறியது:

இன்று தண்ணீர் பற்றாக்குறை மிகப் பெரிய பிரச்னையாக உருவெடுத்துள்ளது. கடந்த சில ஆண்டுகளாக பருவமழை பொய்த்ததால் நீர் பற்றாக்குறை

அதிகரித்துள்ளது. இதைச் சமாளிக்க மழை நீரைச் சேமித்து நிலத்தடி நீரைச் சீராக வைத்து பயன்படுத்துவது அவசியாகும்.

ஆகவே, மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளிலும் மழை நீர் சேமிப்பின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி மழை நீரை வீணாக்காமல் சேமித்து வைக்க மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பை ஏற்படுத்துவதைக் கட்டாயமாக்க வேண்டும் என்றார்.

## மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 16.74 அடியாக இருந்தது

மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 16.74 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 21 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

## ஜூன் 21 விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்

கன்னியாகுமரி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் நாகர்கோவிலில் வெள்ளிக்கிழமை (ஜூன் 21) நடைபெறுகிறது.

மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் அரங்கில் இந்தக் கூட்டம் காலை 10.30 மணிக்கு நடைபெறுகிறது. அப்போது மே மாதம் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்களுக்கு உரிய பதில் அளிக்கப்படும். மேலும் விவசாயிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சியர் எஸ்.நாகராஜன் பெற்றுக் கொள்வதாக மாவட்ட ஆட்சியர் அலுவலக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வேளாண் உற்பத்தியை அதிகரிக்க நவீன தொழில்நுட்பம்




வேளாண் உற்பத்தியை அதிகரிக்க நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டுமென்று மத்திய வேளாண் துறை அமைச்சர் சரத் பவார் கூறியுள்ளார்.

சர்வதேச அளவில் உணவுத் தேவை அதிகரிப்பதற்கு ஏற்ப உற்பத்தி அதிகரிக்காதது குறித்து அவர் கவலை தெரிவித்துள்ளார்.

ஐ.நா.வின் உணவு, வேளாண்மைத் துறை அமைப்பு சார்பில் இத்தாலி தலைநகர் ரோமில் நடைபெற்ற மாநாட்டில் பங்கேற்ற சரத் பவார் பேசியது: வேளாண் துறையில் "ஜெனட்டிக் என்ஜினியரிங்' உள்ளிட்ட அதிநவீன தொழில்நுட்பத்தை தீவிரமாக செயல்படுத்த வேண்டும். வேளாண் துறையின் புதிய கண்டுபிடிப்புகள் விவசாயிகளுக்கு எளிதில் கிடைக்க வழி ஏற்படுத்த வேண்டும்.

சர்வதேச அளவில் வேளாண்துறை ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ள அமைப்புகள் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும். இந்தியாவில் மட்டுமல்லாது சர்வதேச அளவிலும் வேளாண் துறைக்கு பல சவால்கள் உள்ளன. முறையாக திட்டமிட்டு வேளாண் ஆராய்ச்சித் துறையில் முதலீடு செய்வதன் மூலம்தான் எதிர்கால உணவு, ஊட்டச்சத்து தேவைகளை நிறைவு செய்ய முடியும். ஐ.நா.வின் உணவு, வேளாண்மைத் துறை அமைப்புக்கு இந்தியாவின் ஆதரவு தொடரும் என்றார் சரத் பவார்.

இன்றைய வேளாண் செய்திகள்

19.06.2013 A.M

---

**மழையால் வெண்பட்டு கூடு உற்பத்திபாதிப்பு: விலை "கிடு கிடு' உயர்வு**



உடுமலை:பருவநிலை மாற்றங்களால், வெண்பட்டுக் கூடு உற்பத்தி பாதிக்கப்பட்டு, தட்டுப்பாடு அதிகரித்து உள்ளது. இதனால், அரசு கொள்முதல் மையங்களில் இதன் விலை உயர்ந்து வருகிறது.தமிழகத்தில் கோபி, உடுமலை, புதுக்கோட்டை, ஓசூர் உள்ளிட்ட பகுதிகளில், 26 ஆயிரம் ஏக்கர் பரப்பில், மல்பெரி செடிகள் பயிரிடப்பட்டு, வெண்பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவை "ரீலர்'கள் மூலம் பட்டு நூலாக மாற்றப்பட்டு, பட்டுத்துணி உற்பத்திக்கு விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த சில மாதங்களாக பட்டு நூலிழைக்கு கிராக்கி உள்ளதால், வெண்பட்டுக் கூடுகளுக்கு நல்ல விலை கிடைத்து வந்தது.வறட்சி காரணமாக கோபி உள்ளிட்ட பகுதிகளிலும், பருவமழை காரணமாக பிற பகுதிகளிலும் இதன் உற்பத்தி வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.இதனால், கோவை, ஓசூர்போன்ற கொள்முதல்

மையங்களில், வரத்து குறைந்து தட்டுப்பாடு அதிகரித்துள்ளது.தொடர் தட்டுப்பாடு காரணமாக இதன் விலை உயர்ந்துள்ளது.

நேற்றைய நிலவரப்படி, மையங்களில், வெண்பட்டுக் கூடுகளுக்கு கிலோ 425 ரூபாய் வரை அதிகபட்ச விலை நிர்ணயித்து "ரீலர்'கள் கொள்முதல் செய்துள்ளனர்.உடுமலை பகுதி விவசாயிகள் கூறியதாவது:சீன கச்சாப்பட்டு இறக்குமதியால், குறைந்திருந்த விலை, கடந்த ஒரு மாதமாக நிலையாகியுள்ளது. உடுமலை பகுதியிலும் வறட்சி காரணமாக மல்பெரி செடிகள் பாதிக்கப்பட்டுள்ளன. தென்மேற்கு பருவமழைக்கு பின் மீண்டும் முழு அளவு உற்பத்தி கிடைக்க வாய்ப்புள்ளது. வெண்பட்டுக் கூடுகளுக்கு கிடைத்து வரும் விலை தொடர்ந்தால் மட்டுமே, இத்தொழிலில் பாதிப்புஏற்படாமல் தவிர்க்க முடியும்.இவ்வாறு, அவர்கள் தெரிவித்தனர்.

**எரவாநல்லூர் ஏரி மதகை சீரமைக்க விவசாயிகள் கோரிக்கை**

செய்யூர்:எரவாநல்லூர் ஏரி மதகு பழுதடைந்துள்ளதால், சீரமைக்க வேண்டும் என, அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
சித்தாமூர் ஒன்றியத்திற்கு உட்பட்டு உள்ளது சின்ன கயப்பாக்கம் ஊராட்சி. இங்குள்ள, எரவாநல்லூர் கிராமத்தில், ஒன்றிய நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில், 60 ஏக்கர் பரப்பளவு கொண்ட ஏரி உள்ளது. இதை பயன்படுத்தி, 150 ஏக்கர் விவசாய நிலங்கள், பாசன வசதி பெறுகின்றன. இந்த ஏரியில், இரண்டு மதகுகள் உள்ளன.

பழுது

இதில், ஒரு மதகு, ஒரு ஆண்டிற்கும் மேலாக பழுதாகி உள்ளது. இதை சீரமைக்க, ஒன்றிய அதிகாரிகள்

நடவடிக்கை எடுக்காததால், ஏரிக்கு வரும் நீர், மதகு ஓட்டை வழியாக வீணாக வெளியேறுகிறது.

இதனால், ஒரு போகம் கூட பயிரிட முடியாமல், அப்பகுதி விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர்.

இதுகுறித்து, எரவாநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி வேலு கூறியதாவது: ஏரியில், தற்போது சேதமடைந்துள்ள மதகு, கடந்த 2006-07ம் ஆண்டு தான் சீரமைக்கப்பட்டது. ஆனால், தரமற்ற முறையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டதால், சில மாதங்களிலேயே பழுதடைந்தது. இதனால், மழைக்காலத்தில் ஏரிக்கு வரும் நீர், உடைப்பு வழியாக வீணாக வெளியேறுகிறது. இரண்டு மாதங்கள் கூட ஏரியில் நீர் தேக்கி வைக்க முடியாததால், விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. ஏரி தூர்வாரி பல ஆண்டுகள்
ஆகின்றன.
இதனால், தற்போது, செடி, கொடிகள் முளைத்து, நீர் பிடிப்பு பகுதி குறைந்துள்ளது. இதுகுறித்து, பலமுறை அதிகாரிகளிடம் தெரிவித்தும், எந்த வித நடவடிக்கையும் இல்லை. எனவே, ஏரியினை தூர்வாரி, மதகினை சீரமைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இவ்வாறு, அவர் கூறினார்.
இதுகுறித்து, ஊராட்சித் தலைவர் தமிழ்ச்செல்வி கூறுகையில், ""மதகு உடைப்பு குறித்து, சித்தாமூர்
வட்டார வளர்ச்சி அலுவலரிடம் தெரிவித்துள்ளேன். சீரமைக்க நடவடிக்கை எடுப்பதாக கூறியுள்ளார்,'' என்றார்.

**முறைகேடுகளால் கமிட்டிக்கு நெல் வரத்து...சரிவு!ரூ. 3 கோடியை பெற்றுத் தர வேண்டும்**

செஞ்சி:செஞ்சி மார்க்கெட் கமிட்டியில் நடந்த முறைகேடுகளால் நெல் வரத்து கடும் சரிவை கண்டுள்ளது. விவசாயிகளுக்கு சேர வேண்டிய 3 கோடி ரூபாயை பெற்றுத் தர மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
முதலிடம்
தமிழகத்திலேயே நெல் வரத்தில் விழுப்புரம் மாவட்டத்தில் செஞ்சி மார்க்கெட் கமிட்டி முதல் இடத்தில் இருந்தது. ஆரம்பத்தில் தினம் 30 ஆயிரம் மூட்டைகள் வரை நெல் வரத்து இருந்தது.

நெல் வர்த்தகத்தை நம்பி செஞ்சி தாலுகாவில் பல ஆயிரம் தொழிலாளர்களும், சார்பு தொழிலாளர்களும் பிழைத் தனர். சமீபகாலமாக முறை கேடுகள், நிர்வாக திறமையின்மையினால் பிரச்னைகள் எழுந்தன.

தேக்கம்

அதிகாரிகள் வியாபாரிகளிடம் காட்டிய பாரபட்சம் பணம் பட்டுவாடாவில் துவங்கி, ஏலம் முடிந்த பிறகு விலை திருத்தும் அளவிற்கு சென்றது.

இதை ஆரம்பத்தில் கண்டறிந்து தடுக்காமல் அலட்சியம் காட்டியதால் 100க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு 3 கோடி ரூபாய் பணப் பட்டுவாடாவில் நிலுவை உள்ளது.

இதை சரி செய்ய முடியாமல் மாவட்ட அதிகாரிகளும் திணறி வருகின்றனர்.

அம்பலம்

தொடர்ந்து கமிட்டி இயங்கினால் நிலுவை அதிகரிக்கும் என பயந்த தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் என பொய்க் காரணம் கூறி கடந்த வாரம் 4 நாள் கமிட்டியை மூடினர். விவசாய சங்க நெருக்கடியால் நடந்த ஆலோசனை கூட்டத்தில் பணப்பட்டுவாடா நிலுவை இருப்பது அம்பலமானது. அதே போல் இந்த வாரம் 3 நாட்கள் மட்டுமே கமிட்டி இயக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதிலும் நிலுவை பணத்தை சரியாக கணக்கிட்டு யார், யார் எவ்வளவு தரவேண்டும் என பட்டியலிட்டு வசூலிக்க நடவடிக்கை எடுக்கவில்லை.

நிலுவை தொகை குறித்து தவறான தகவலை தந்தனர். கமிட்டிக்கு உள்ள நிரந்தர விதிமுறைகளை, புதிய நிபந்தனைகளாக கொண்டு வந்தனர்.

பணம் பட்டுவடாவை கமிட்டி வளாகத்தில் அன்றே செய்ய வேண்டும், மூட்டைகளை 3 நாட்களில் அகற்ற வேண்டும். பணம் நிலுவை உள்ள வியாபாரிகளை ஏலத்தில் அனுமதிப்பதில்லை என குறிப்பிட்டுள்ளனர்.

இந்த விதிமுறைகளை கமிட்டி நிர்வாகம் கடைபிடிக்காதற்கு இதுவே உதாரணம். இதற்கு காரணமாக உள்ளவர்கள் மீது கமிட்டி நிர்வாகம் என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது என்ற கேள்வி எழுந் துள்ளது.

தடுமாற்றம்

நிலுவையில் உள்ள பணத்தை செலுத்துவதில் பல வியாபாரிகள்

தடுமாறுகின்றனர். இவர்களின் கொள்முதலை உரிய நேரத்தில் தடுக்காமல் அனுமதியளித்த நிர்வாகமே விவசாயிகளின் பணத்திற்கு பதில் சொல்ல வேண்டும்.

அடிப்படை வசதிகள்

விவசாயிகளுக்கு அடிப் படை வசதிகள் இல்லை. ஓய்வு அறையை பூட்டி வைத்து, பக்கவாட்டு பகுதியை கழிப்பிடமாக மாற்றி விட்டனர். மின்விளக்குகள் எரிவதில்லை, தண்ணீர் வசதி இல்லை.

மேல் கூரை உள்ள குடோன்களில் அதிக விலையை எதிர்பார்த்து நெல்லை இருப்பு வைத்திருக்கும் வியாபாரிகளின் நெல் மூட்டைகளை பல மாதங்களாக இலவசமாக இருப்பு வைத்துள்ளனர். இதை அகற்றவும், வாடகை வசூலிக்கவும் நடவடிக்கை எடுக்க வில்லை.

கூரையில்லாத களத்தில் விவசாயிகளின் நெல் மூட்டைகளை வைத்து ஏலம் நடத்துகின்றனர். மழையால் நெல் மூட்டைகள் நனைந்து விலை குறைந்து நஷ்டம் ஏற்படுகிறது.

சாக்குபை எங்கே

விவசாயிகள் கொண்டு வரும் நெல் மூட்டைகளை கமிட்டி நிர்வாகத்தின் சாக்குபைகளில் மாற்றி உடனே சாக்கு பையை விவசாயிக்கு தரவேண்டும். இதன் பிறகு நெல்லை கொள்முதல் செய்யும் வியாபாரி தனது பையில் மாற்றி எடுத்துச் செல்ல வேண்டும்.

இந்த நடைமுறைக்காக சாக்கு தேய்மானத்திற்கு என ஒரு மூட்டைக்கு 35 பைசாவை வியாபாரிகளிடம் வசூலிக்கின்றனர்.

ஆனால் இது வரை ஒரு மூட்டை நெல் கூட இந்த நடைமுறையில் கையாண்டதில்லை. ஒவ்வொரு ஆண்டும் சாக்கு வாங்கியதாகவும், அது கிழிந்து ஏலம் விட்டதாக பல லட்சம் ரூபாயை கணக்கு காட்டி வருகின்றனர்.

வீண் அலைச்சல்

அதிகமாக நெல் வரும் போது ஒரே நாளில் "லாட்' வழங்கினால் கையாள முடியவில்லை. பணப் பட்டுவடா தாமதம் ஆகும் என பொய்காரணம் கூறுகின்றனர். இதை விட கூடுதலாக நெல்வரத்து இருந்த போது கூட மறுநாள் "லாட்' வழங்கியதில்லை.

நெல் மூட்டைகளை கையால்வதில் சிக்கல் ஏற்பட்டால் கூடுதல் தொழிலாளர்களை நியமிக்கலாம். இதை விடுத்து விவசாயிகளை தங்க வைத்து "லாட்' வழங்கி வீண்

அலைச்சலுக்கு ஆளாக்கி வருகின்றனர்.

தினம் ஒரு பிரச்னையை சந்திக்க வேண்டிய நிலையால் செஞ்சி மார்க்கெட் கமிட்டிக்கு நெல் மூட்டைகளை கொண்டு வருவதை சில ஆண்டுகளாக விவசாயிகள் குறைத்து வருகின்றனர்.

வரத்து சரிவு

கடந்த ஆண்டு இதே நாட்களில் இருந்த வரத்து இந்த ஆண்டு கடும் சரிவை நோக்கியுள்ளது. கடந்த திங்கள் கிழமை 6 ஆயிரம் மூட்டையாக இருந்த நெல் வரத்து நேற்று முன்தினம் 1500 மூட்டையாக குறைந்தது.

தடுமாறும் நிர்வாகத்தை நிலைநிறுத்த போதிய ஊழியர்கள், திறமை மிக்க நேர்மையான அதிகாரியை நியமிக்க வேண்டும்.

நிலுவையில் உள்ள பணத்தை வசூலித்து தாமதமின்றி விவசாயிகளுக்கு வழங்க மாவட்ட நிர்வாகம் தலையிட வேண்டும்.

**விவசாய நிலங்கள் கணக்கெடுக்க கம்ப்யூட்டரில் விண்ணப்பங்கள் பதிவு**

திண்டிவனம்:திண்டிவனம் அடுத்த ஆலங்குப்பம் பகுதியில் கம்ப்யூட்டர் மூலம் விவசாய நிலம் கணக்கெடுப்பு விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றனர். மாவட்டத்தில் விவசாய நிலம் மற்றும் இயந்திரங்கள் குறித்து கணக் கெடுத்து தாலுகா வாரியாக உள்ள வேளாண்மை துறை அலுவலகம் மூலம் கம்ப்யூட்டரில் பதிய தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

திண்டிவனம் அடுத்த முன்னூர், ஆலங்குப்பம், வடநெற்குணம், குரூர், வேப்பேரி கிராமங்களில் உள்ள நஞ்சை, புஞ்சை நிலங்கள் குறித்து விபரங்களை திண்டிவனம் வேளாண்மை துறை அலுவலர்கள் மூலம் விவசாயிகளிடமிருந்து பண்ணை தகவல் விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன.

அடுத்த ஆண்டு முதல் விவசாய நிலங்களை அரசு ஆன்லைன் மூலம் பதிவதால் பண்ணை கையேடுகள் இருந்தால் மட்டுமே பொருட்கள் வாங்க முடியும்.

கூட்டுறவு வங்கிகளில் விவசாய கடன், நகை கடன், வேளாண்மை பண்ணைகளில் விதை, உரம் மற்றம் இயந்திரங்கள் வாங்கவும், அரசு மூலம் சலுகைகள், இயற்கை சீற்றத்தால் விவசாய பயிர்கள் பாதித்தால் நிவாரணம் பெறவும், கால்நடை, தோட்டக் கலையில் பொருட்கள் வாங்க பண்ணை கையேடு பயன்படும்.

வேளாண்மை உதவி இயக்குனர் கென்னடிஜெபகுமார், வேளாண்மை அலுவலர் எத்திராஜ், துணை வேளாண்மை அலுவலர் சௌந்தரராஜன், ஆத்மா திட்ட மேலாளர் சஞ்சய் காந்தி, உதவி விதை அலுவலர் மாணிக்கவாசு, உதவி வேளாண்மை அலுவலர்கள் சுரேஷ், மஞ்சு, மோகன்குமார், யமுனா கலந்து கொண்டு விவசாயிகள் 3 ஆயிரம் பேர்களிடம் இருந்து விண்ணப்பங்களை பெற்றனர்.

**மரவள்ளியில் நோய் தாக்குதல் தீவிரம் மஞ்சள் நிறமாக மாறி கருகும் பரிதாபம்**

பனமரத்துப்பட்டி: பனமரத்துப்பட்டி வட்டாரத்தில், நுண்ணூட்டச் சத்து பற்றாக்குறை காரணமாக, நோய் தாக்கிய மரவள்ளி செடிகள், பசுமையை இழந்து, மஞ்சள் நிறமாக மாறி, கருகி மடிந்து வருகிறது. அதனால், விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர். தமிழகத்தில், சேலம், தர்மபுரி, நாமக்கல், விழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களில், அதிக அளவில் மரவள்ளி பயிரிடப்படுகிறது. மரவள்ளியில், ஸ்டார்ச், சத்துமாவு தயார் செய்து, வடமாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. சேலம் மாவட்டத்தில், ஆத்தூர், தம்மம்பட்டி, பனமரத்துப்பட்டி, தலைவாசல் உள்ளிட்ட பகுதிகளில், மரவள்ளி பயிரிடப்பட்டுள்ளது.

பனமரத்துப்பட்டி வட்டாரத்தில், மரவள்ளி செடி நடவு செய்து, ஐந்து மாதம் ஆன நிலையில், தற்போது, கடுமையாக நோய் தாக்கியுள்ளது.

மரவள்ளி செடியில், நுண்ணூட்டச் சத்து குறைபாடு காரணமாக, இலைகள் பசுமையை இழந்து, மஞ்சள் நிறமாக மாறியது. மரவள்ளி செடி, வளர்ச்சி குன்றி, இலைகள் சுருண்டு, சிறுத்து, வெள்ளை நிறமாகவும் மாறியது தொடர்ந்து, செடியில் புதியதாக தோன்று இளம் இலைகள் கருகி, செத்து மடிகிறது. பெரமனூர், பள்ளித்தெருப்பட்டி, எஸ்.ஆட்டையாம்பட்டி, களரம்பட்டி உள்ளிட்ட கிராமங்களில், நோய் தாக்கிய மரவள்ளி செடிகள் செத்து மடிந்து வருகிறது. அதனால், மரவள்ளி பயிரிட்டுள்ள விவசாயிகள், பெரும் வேதனை அடைந்துள்ளனர்.

சந்தியூர் வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் கூறியதாவது: மரவள்ளியில், இரும்புச்சத்து மற்றும் துத்தநாகம் ஆகிய நுண்ணூட்டச் சத்து குறைபாடு காரணமாக, நோய் பரவியுள்ளது. இரும்புச்சத்து குறைபாடு, விதை கரணை நட்ட இரண்டாம், மூன்றாம் மாதங்களில் அதிக அளவில் காணப்படும்.

இக்குறைபாட்டை சரி செய்ய, ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஐந்து கிராம் இரும்பு சல்பேட் கரைசலை தெளிக்க வேண்டும். இத்துடன், ஒரு லிட்டர் தண்ணீருக்கு பத்து கிராம் யூரியா கலந்து தெளிக்க வேண்டும். களர், உலர் மண் வகையில், இரும்புச்சத்து பற்றாக்குறையுடன், துத்தநாகம் சத்து குறைபாடு காணப்படும். இதற்கு, ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஐந்து கிராம் துத்தநாக சல்பேட் கரைசலை தெளிக்கலாம். மரவள்ளி பயிரிடப்படும் வயலில், 25 கிலோ சல்பேட், 50 கிலோ இரும்பு சல்பேட்டை அடியுரமாக இடவேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**வைகாசி பட்டம் கை கொடுக்காததால் பாதிப்பு : ஆடி பட்டத்துக்கு விவசாயிகள் எதிர்பார்ப்பு**

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் வைகாசி பட்டமும் பாதிக்கப்பட்ட நிலையில், எதிர்பார்த்தபடி தென்மேற்கு பருவமழை துவங்காத நிலையில், ஆடி பட்டம் கைகொடுக்குமா என்ற எதிர்பார்ப்புடன் விவசாயிகள் கலக்கத்தில் உள்ளனர். விவசாயத்தை பிரதானமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில் கடந்தாண்டு பருவமழை பொய்த்து போனதால், மாவட்டம் முழுவதும் விவசாயம் பெரும் பாதிப்பை சந்தித்துள்ளது. அதே போல் இந்தாண்டு கோடை வெயிலும் எப்போதும் இல்லாத அளவுக்கு வாட்டி எடுத்ததால், நீர் ஆதாரங்களில் இருந்து குறைந்தளவு நீரும் வற்றி, நீர் ஆதாரங்கள் அனைத்தும் வறண்ட நிலமாக மாறி போனது. கோடையில் அக்னி நட்சத்திரம் முடியும் தருவாயில் வெப்ப சலனத்தால் மழை பெய்தது. இந்த மழையை வைத்து விவசாயிகள் வைகாசி பட்ட பயிர்களுக்கு நிலங்களை தயார் செய்தனர். தொடர்ந்து தென்மேற்கு பருவமழை கைகொடுக்கும் என்ற எதிர்பார்புடன் விவசாயிகள் நிலங்களை தயார் செய்தும் பலன் இல்லாமல் போனது. கடந்த மாதம் இறுதியில் பெய்த மழைக்கு பின் போதிய மழை இல்லை. ஏற்கனவே நீர் ஆதாரங்கள் வறண்ட நிலையில் நிலத்தடி நீர் மட்டமும்

கைகொடுக்காத நிலையில் விவசாயிகளுக்கு வைகாசி பட்டத்துக்கு நிலங்களை தயார் செய்யும் எந்த பிரயோசனமும் இல்லாமல் போனது. ஜூன் முதல் வாரத்தில் துவங்கும் என எதிர்பார்த்த தென் மேற்கு பருவமழை இது வரையில் தர்மபுரி மாவட்டத்தில் பெய்யாத நிலையில், அடுத்த ஆடிப்பட்டம் கைகொடுக்குமா? என்ற கலக்கம் விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து விவசாயம் பாதிக்கப்பட்ட நிலையில், விவசாயம் சார்ந்த தொழிலில் ஈடுபட்ட தொழிலாளர்கள் அனைவரும் வேலை வாய்ப்புக்காக இடம் பெயரும் அவலம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக பென்னாகரம், அரூர், பாலக்கோடு ஆகிய தாலுகா பகுதி மக்கள் வெளி மாவட்டங்களில் குவாரிகள், செங்கல் சூளைகளுக்கு வேலை வாய்ப்பு தேடி செல்கின்றனர். இந்த வாய்ப்பை பயன்படுத்தி வெளி மாநிலங்களில் வேல வாங்கி கொடுக்கும் புரோக்கர்கள் தொழிலாளர்களை முன் பணம் கொடுத்து செங்கல் சூளை, குவாரி ஆகிய பணிகளுக்கு அனுப்பி வருகின்றனர். தொடர்ந்து மழை கைகொடுக்கவில்லை என்றால் சிறு விவசாயிகளும் வேலை வாய்ப்புக்காக வெளி மாநிலங்கள், வெளி மாவட்டங்களுக்கு செல்லும் நிலை ஏற்படும். மழை பொய்த்து போனதால், பயிறு வகை, உணவு தானியங்கள் விலையும் பல மடங்கு உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. காய்கறிகள் உற்பத்தி, 40 முதல் 60 சதவீதம் வரையில் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளூர் காய்கறிகள் விலை தொடர்ந்து ஏறுமுகத்தில் உள்ளது. அதே போல் போதிய தண்ணீர் இல்லாததால், வெண்டை, அவரை, கத்தரி உள்ளிட்ட காய்கறிகள் நோய் தாக்கி தரமில்லாத காய்கறிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. கடந்த காலங்களில் வெளியூர் மற்றும் வெளி மாவட்டங்களுக்கு இங்கிருந்து காய்கறிகள் விற்பனை சென்றது. உற்பத்தி பாதிப்பு காரணமாக தர்மபுரிக்கு ஓசூர், ராயக்கோட்டை, கிருஷ்ணகிரி ஆகிய பகுதிகளில் இருந்து காய்கறிகளை வியாபாரிகள் கொள்முதல் செய்து விற்பனை செய்கின்றனர். உள்ளூர் தேவை அதிகரித்துள்ள நிலையில் பல விவசாயிகள் நேரடியாக சரக்கு வாகனங்கள் மூலம் காய்கறிகதைள விற்பனை செய்ய துவங்கியுள்ளனர். தென்மேற்கு பருவமழை தாமதம் இன்றி கை கொடுத்தால் மட்டுமே தர்மபுரி மாவட்டத்தில் விவசாய தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். ஆடி பட்டத்துக்கு முன் பருவமழையை விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர்.

**10 ஆயிரம் மூட்டை வெல்லம் உற்பத்தி பாதிப்பு : போதிய நீரின்றி 30 ஆயிரம் ஏக்கர் கரும்பு நாசம்**

கோபிசெட்டிபாளையம்: ஈரோடு மாவட்டத்தில், 30 ஆயிரம் ஏக்கர் கரும்பு தண்ணீரின்றி கருகியுள்ளதால், வெல்ல உற்பத்தி பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக, 1.40 லட்சம் ஏக்கரில் கரும்பு பயிரிடப்படும். இதில், 80 ஆயிரம் ஏக்கரில் கரும்புகள் அச்சு வெல்லம், நாட்டு சர்க்கரை, உருண்டை வெல்லம் தயாரிக்க பயன்படுத்தப்படும். பதிவு செய்த விவசாயிகளிடம் இருந்து மட்டுமே, சர்க்கரை ஆலைகள், கரும்பை கொள்முதல் செய்வதால், வேறு வழியின்றி வெல்லம் மற்றும் நாட்டு சர்க்கரை பணியில் பல விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த இரண்டு ஆண்டாக பருவமழை பொய்த்ததை தொடர்ந்து, கரும்பு சாகுபடி பரப்பளவு, 20 முதல், 30 சதவீதம் வரை குறைந்து காணப்பட்டது.

உருண்டை மற்றும் நாட்டு சர்க்கரை தயாரிக்க, போதிய கரும்பு கிடைக்காததால், ஈரோடு மாவட்டத்தில், 200க்கும் மேற்பட்ட ஆலைகள் மூடப்பட்டுள்ளன. வெல்லம் தயாரிப்பில் ஈடுபட்ட, ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள், வேறு தொழிலுக்கு சென்றுவிட்டனர். உருண்டை வெல்லம் மற்றும் நாட்டு சர்க்கரை தயாரிப்பு குறைந்த காரணத்தால், விலை தொடர்ந்து அதிகரித்த வண்ணம் உள்ளன.

தமிழகத்தில் கவுந்தப்பாடி மற்றும் சித்தோட்டில் உள்ள சர்க்கரை மார்க்கெட்டில் தான் அதிகளவு வெல்லம் ஏலம் நடக்கிறது. இந்த மார்க்கெட்டில், 60 கிலோ நாட்டு சர்க்கரை மூட்டை, 1,450 ரூபாயில் இருந்து, 1,950 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. அச்சு வெல்லம், 30 கிலோ மூட்டை, 1,100 முதல், 1,200 ரூபாய் வரையிலும், உருண்டை வெல்லம், 30 கிலோ மூடை, 1,250 ரூபாயில் இருந்து, 1,480 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது. நாட்டு சர்க்கரை மற்றும் வெல்ல உற்பத்தியாளர்களுக்கு இது கட்டுப்படியான விலை இல்லை, என குமுறி வருகின்றனர்.

ஜனவரி, ஃபிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களில் நாட்டு சர்க்கரை மற்றும் வெல்லம் வரத்து அதிகமாக இருக்கும். இரண்டு மார்க்கெட்டுக்கும் சராசரியாக, 25 ஆயிரம் மூட்டை வரை வரத்தாகும். பருவமழை பொய்த்ததால், மாவட்டம் முழுவதும், 50 ஆயிரம் ஏக்கர் கரும்பு, தண்ணீரின்றி கருகி காணப்படுகிறது. இதனால், இரண்டு மார்க்கெட்டுக்கும், 10 ஆயிரம் முதல், 15 ஆயிரம் மூட்டைகளே வெல்லம் வரத்தாகிறது.

ஈரோடு மாவட்டம் முழுவதும் பாசனப்பகுதிகளில் தண்ணீரில்லாததால் கிணறு, போர்வெல் உள்ளிட்டவை மூலம் கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளன. 30 ஆயிரம் ஏக்கர் கரும்பு, தண்ணீரின்றி கருகி காணப்படுவதால், நடப்பாண்டு வெல்லம் தயாரிப்பு பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

எல்.பி.பி., பாசனப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் கூறியதாவது: கோபி சுற்று வட்டாரத்தில் நாகதேவன்பாளையம், நாதிபாளையம், சந்திராபுரம், வெள்ளாங்கோவில் உட்பட மாவட்டம் முழுவதும், ஆயிரக்கணக்கான ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

நடப்பாண்டு, சில நாட்கள் பெய்த மழை, மீண்டும் பொய்த்து விட்டதால் கடுமையான வறட்சி நிலவுகிறது. பாசனத்துக்கு தேவையான தண்ணீர் கிடைக்காததால் கரும்பு தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை. மாவட்டம் முழுவதும், 30 ஆயிரம் ஏக்கர் பரப்பில் கரும்பு கருகி காணப்படுகிறது. கரும்பு பயிருக்கு வறட்சி நிவாரணத்தை எதிர்பார்த்து விவசாயிகள் காத்துள்ளனர். வறட்சி நிவாரணம் உடனடியாக கிடைக்க, மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றனர்.

**வேளாண் சங்கத்தில் பருத்தி ஏலம் துவக்கம்**

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று முதல் பருத்தி ஏலம் துவங்கியது.

சத்தியமங்கலம், கோபி ரோட்டில் உள்ளது வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம். இச்சங்கத்தில் ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை மற்றும்

வெள்ளிக்கிழமை வாழைத்தார் ஏலமும், புதன்கிழமை மஞ்சள் ஏலமும் நடக்கிறது. தவிர, இச்சங்கத்தின் சார்பில் மஞ்சள், மக்காச்சோளம் போன்ற விவசாய பொருட்களுக்கு குறைந்த வட்டியில் ஸ்டாக் செய்து, கடனும் வழங்குகின்றனர். நேற்று முதல் இச்சங்கத்தில் பருத்தி ஏலம் துவங்கியது. நேற்று காலை சத்தியமங்கலம் மற்றும் சுற்றுப்பகுதியில் இருந்து, 200க்கும் மேற்பட்ட விவசாயிகள், தங்கள் வயலில் விளைந்த பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

இப்பருத்தியை கொள்முதல் செய்ய சத்தியமங்கலம், ஈரோடு, அன்னூர், கோவை ஆகிய பகுதிகளில் இருந்து வியாபாரிகள் வந்தனர். ஏலம் முறையில் நடந்த இந்த விற்பனையை, சங்கத்தின் தலைவர் வரதராஜ் துவக்கி வைத்தார்.

துணைத்தலைவர் துரைசாமி, இயக்குனர் வீரப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஏலத்துக்கு, பிரம்மா, சஞ்சு, பி.டி., ஆகிய ரகங்களை சேர்ந்த பருத்திகள் வந்திருந்தது. நேற்று நடந்த முதல் நாள் ஏலத்தில், ஒரு கிலோ பருத்தி அதிகபட்சமாக, 50.10 ரூபாய்க்கும், குறைந்த விலையாக ஒரு கிலோ, 46.90 ரூபாய்க்கும் விற்பனையானது. இந்த விலை போதாது, என விவசாயிகள், சங்கத்தலைவர் வரதராஜிடம் கூறினர்.

வியாபாரிகளிடம் பேசி, அடுத்த ஏலத்தில் கூடுதல் விலை பெற்றுத்தர முயற்சி செய்வதாக, தலைவர் கூறினார். நேற்று நடத்த ஏலத்தில், 17 டன், ஆறு லட்சம் ரூபாய்க்கு பருத்தி விற்பனையானது. ஏலத்துக்கான ஏற்பாடுகளை சங்கத்தின் வேளாண் துணை இயக்குனர் இளங்கோவன் தலைமையில் அலுவலர்கள் செய்திருந்தனர்.

**நாட்டு கோழிப்பண்ணை உரிமையாளர் மீது வழக்கு**

பெருந்துறை: பெருந்துறை, குன்னத்தூர் ரோட்டில் "அம்பாள் ஆக்ரோ பார்ம்ஸ்" என்ற பெயரில் நாட்டுக்கோழிப்பண்ணை நிறுவனம் செயல்பட்டு வந்தது. விஜயமங்கலத்தை சேர்ந்த சென்னியப்பன், வீரசங்கிலியை சேர்ந்த சிவக்குமார்

ஆகிய இருவரும் பண்ணையை நடத்தி வந்தனர்.
நாட்டுக் கோழிப்பண்ணையில் முதலீடு செய்பவர்களுக்கு, கொட்டகை அமைத்து, வளர்ப்பதற்காக நாட்டுக்கோழி குஞ்சுகள் வழங்கி, அதற்கு வளர்ப்பு கூலியும், ஊக்கத்தொகையும் மாதம் தோறும் வழங்குவதாக விளம்பரம் செய்தனர்.
இதை நம்பி, காஞ்சிக்கோவிலை சேர்ந்த வெங்கடாசலம், 34, கடந்த ஆண்டு ஆகஸ்டு, 17ம் தேதி, ஒரு லட்சம் ரூபாய் முதலீடு செய்தார்.
ஆனால் பண்ணை சார்பில் வெங்கடாசலத்துக்கு கொட்டகை அமைத்துக்கொடுக்கவில்லை. நாட்டுக்கோழி குஞ்சுகளும் வழங்கப்படவில்லை. பெருந்துறை போலீஸில் வெங்கடாசலம் புகார் செய்தார். பெருந்துறை இன்ஸ்பெக்டர் விவேகானந்தன் விசாரித்து, வழக்குப்பதிவு செய்தார்.

## இருளில் மூழ்கிய தினசரி காய்கனி மார்க்கெட் நகராட்சி ஆணையரிடம் வியாபாரிகள் முறையீடு

பவானி: பவானி வாரச்சந்தை ரோட்டில் இயங்கி வரும், தினசரி காய், கனி மார்க்கெட் கடந்த, ஐந்து நாட்களாக இருளில் மூழ்கிக்கிடக்கிறது. இதனால் பொது மக்கள், வியாபாரிகள் அவதிக்கு உள்ளாகின்றனர்.
பவானி நகராட்சிக்கு சொந்தமான தினசரி காய்கனி மார்க்கெட், பவானி தேவபுரம், வெள்ளை விநாயகர் கோவில் அருகில் இயங்குகிறது. இங்கு, எட்டுக்கு, எட்டு அடி அளவு கொண்ட, 200 கடைகள் உள்ளன.
தினமும் நூற்றுக்கணக்கான வியாபாரிகள், விவசாயிகள், பொதுமக்கள் வந்து செல்வதால், இம்மார்க்கெட் எப்போதும் கூட்ட நெரிசலாக காணப்படும். ஆனால், கடந்த, ஐந்து நாட்களாக இக்கடைகளில் மின்சாரம் இல்லாமல் வியாபாரிகளும், பொதுமக்களும் மிகுந்த சிரமத்துக்கு ஆளாகின்றனர்.
இச்சம்பவம் தொடர்பாக, பவானி காய்கனி மார்க்கெட் வியாபாரிகள் கூறியதாவது:
இந்த மார்க்கெட், 1991ல் துவங்கப்பட்டது. பல ஆண்டுகளாக கடை நடத்தி வருகிறோம். இதுவரை, எந்த ஒரு ஒப்பந்ததாரர்களும், கரண்ட் கட் செய்தது

இல்லை. போதிய அடிப்படை வசதிகள், இந்த மார்க்கெட்டில் ஏதுவும் இல்லை. இது வரை நாங்கள் ஒரு லைட், ஒரு எலக்ரானிக் தராசு வைத்து கொள்வது வழக்கம். தற்போது மார்க்கெட் குத்தகைக்கு எடுத்துள்ள ஒப்பந்ததாரர், அதிக மின்சார கட்டணம் வருவதாக கூறி, மின் கட்டணம் கட்ட தவறியாதல், மின் இனைப்பு துண்டிக்கப்பட்டு உள்ளது.

நாங்கள் அதிகாலை, மூன்று மணி நேரமும், இரவு மூன்று மணி நேரமும் தான் மின்சாரத்தை பயன்படுத்துகிறோம். ஐந்து நாட்களாக கரணட் கட் குறித்து எந்த விதமான பதிலும் ஒப்பந்ததாரர் கூற மறுக்கின்றனர், என தெரிவித்தனர்.

தவிர, இப்பிரச்னை குறித்து சங்க தலைவர் மாதேஸ்வரன் தலைமையில், நகராட்சி ஆணையரை வியாபாரிகள் சந்தித்து மனுக்கொடுத்தனர்.

இதுபற்றி ஒப்பந்ததாரர்கள் தரப்பில் கூறியதாவது:

மார்க்கெட்டில், எட்டுக்கு, அளவு கொண்ட ஒரு கடைக்கு, ஒரு பல்ப் மட்டும் தான் பயன்படுத்த வேண்டும். ஆனால் பல கடைகாரர்கள், முதல், 4 பல்ப் பயன்படுத்துகின்றனர். அதேபோல் யூ.பி.எஸ்., மொபைல்ஃபோன், எலட்ரானிக் தராசு போன்றவைகள் பயன்படுத்துவதால், மிக அதிகமாக மின் கட்டணம் வருகிறது. இதுபற்றி பல முறை மார்க்கெட் சங்கத்தினரிடம் முறையிட்டும் எந்தவிதமான பலன் கிடைக்கவில்லை.

அதிக தொகை வந்ததால், மின் கட்டணம் கட்ட முடியாமல் போனது. மார்க்கெட் ஏலத்தின்போது, நகராட்சி நிர்ணயம் செய்த கட்டண தொகையை, வியாபாரிகள் கொடுக்க மறுக்கின்றனர். ஒரு சில கடைகாரர்கள் சேர்ந்து, மின்கம்பத்தின் பீஸை பிடிங்கி சென்றதாக தெரிகிறது. இதனால் தான் மார்க்கெட் இருளில் மூல்கி உள்ளது, என்றனர்.

இம்மார்க்கெட் வியாபாரிகள், ஒப்பந்ததாரர் பிரச்னையால், மின்தடை செய்யப்பட்டு, சிறு வியாபாரிகள், பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர்.

இரவில், சரக்கு இறக்க வரும் லாரிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறது. இப்பிரச்னை

குறித்து நகராட்சி நிர்வாகம் பேச்சுவார்த்தை நடத்தி, வரும் காலங்களில் இப்பிரச்னை தொடராமல் தீர்க்க வேண்டும்.

**ஜூலை 9க்குள் பணம் வழங்க ஒப்புதல் விவசாயிகள் போராட்டம் வாபஸ்**

அந்தியூர்: அந்தியூர் அருகே சக்தி சர்க்கரை ஆலை சார்பில், கொள்முதல் செய்யப்பட்ட கரும்பு, வங்கி கடன் வழங்குவதில் இழுத்தடிப்புக்காக, அதிகாரிகள் மற்றும் விவசாயிகளுகளுக்கிடையே நடந்த பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டது.

அந்தியூர் ஆப்பக்கூடல் அருகே சக்தி சர்க்கரை ஆலை நிர்வாகம், கோபி, கவுந்தப்பாடி, ஈரோடு, புதுக்கரைப்புதூர், அந்தியூர், சென்னிமலை உள்ளிட்ட, 20 டிவிஷனை சேர்ந்த விவசாயிகளிடம் இருந்து, கரும்பு கொள்முதல் செய்கிறது. விவசாயிகளிடம் கரும்பு கொள்முதல் செய்யும் நிர்வாகம், நிலுவையில் உள்ள தொகை வழங்காமலும், வங்கி கடன் செலுத்தாமலும் இழுத்தடித்தது.

இந்நிலையில், ஓராண்டுக்கும் மேலாக இழுத்தடிக்கும் விவசாயிகளுக்கான நிலுவைத்தொகை, இரண்டாண்டுகளாக வழங்காமல் இருக்கும் வங்கி கடன் ஆகியவற்றை உடனடியாக வழங்க வேண்டும் எனக்கூறி, 300க்கும் மேற்பட்ட விவசாயிகள், சக்தி சர்க்கரை ஆலையில் உள்ளிறுப்பு போராட்டத்துடன், நிர்வாகிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். 90 கோடி ரூபாயை வழங்க வேண்டும், என விவசாயிகள் தரப்பில் கோரினர்.

ஆலை நிர்வாக தலைவர் நடராஜன், பொது மேலாளர் ராஜேந்திரன் ஆகியோருடன், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில தலைவர் வெங்கடாச்சலம், மாவட்ட செயலாளர் செஙகோட்டையன் உள்ளிட்ட விவசாயிகள் பேச்சுவார்த்தை நடத்தினர்.

நேற்று மாலை, ஜூலை, 9ம் தேதிக்குள் அனைத்து தொகையையும் வழங்கிவிடுவதாக, ஆலை நிர்வாகம் தரப்பில் கூறியதை தொடர்ந்து, விவசாயிகள் கலைந்து சென்றனர்.

**பருவமழையின்றி "பலா' விளைச்சல் "டல்'**

சத்தியமங்கலம்: கடம்பூர் மலைப்பகுதியில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவமழை பொய்த்ததால் பழா விளைச்சல் கடுமையாக பாதித்தது.
சத்தியமங்கலம் அடுத்துள்ளது கடம்பூர் மலைப்பகுதி. கடல் மட்டத்தில் இருந்து, 750 மீட்டர் உயரம் கொண்டதாகும். இந்த பகுதியில் ஓரளவு குளிர்ச்சியாக இருக்கும். இதனால் கடம்பூர் மற்றும் கடம்பூரில் இருந்து, 600 மீட்டர் உயரம் கொண்ட மல்லியம்மன் துர்க்கம் ஆகிய இடங்களில் பலா பழம் விளைகிறது.
மல்லியம்மன் துர்க்கம் கிராமத்தில் விளையும் பலா பழத்துக்கு தனிச்சுவை உண்டு. இப்பழங்கள் அளவில் பெரியதாகவும், உள்ளிருக்கும் பழம் அமர்ந்த மஞ்சள் நிறத்தில், அதிக சுவையுடன் காணப்படும். ஈரோடு, கோவை, திருப்பூர், சத்தியமங்கலம் உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து கடம்பூர் வரும் மக்கள், மல்லியம்மன் துர்க்கம் பகுதியில் விளைந்த பலா பழத்தை தேடிப்பிடித்து வாங்கி செல்வது வழக்கமாகும்.
புகழ்பெற்ற இப்பலா பழங்கள் தற்போது, "வேண்டாம்' என்று மறுக்கும் அளவுக்கு மாறியுள்ளது.
கடந்த இரண்டு ஆண்டுகளாக கடம்பூர் மலைப்பகுதியில் பருவமழை பெய்யவில்லை. இதனால் பலா மரத்தில் பிஞ்சுகள் உதிர்ந்து விளைச்சல் பாதிக்கப்பட்டது. எஞ்சி இருந்த பிஞ்சுகள், பழமாகியுள்ள நிலையில் அதன் அளவும் சிறியதாக உள்ளது.
மேலும் நோய் தாக்கியதால், பலா பழத்தில் ஆங்காங்கே அழுகல் காணப்படுகிறது. கடும் வறட்சியால் பலா பழத்தின் சுவையும் குறைந்து, விளைச்சலும் பாதிக்கப்பட்டது.

**ரசாயன பொருட்களால்மண்வளத்துக்கு பாதிப்பு**

கோத்தகிரி:"உணவு உற்பத்தியை பெருக்குவதற்காவும், பூச்சிகளின் தொல்லையை ஒழிப்பதற்காகவும் ரசாயன பொருட்களை பயன்படுத்தப்படுவதால், மண்வளம் பாதிக்கப்பட்டுள்ளது' என தெரிவிக்கப்பட்டது. கோத்தகிரி கூக்கல்தொரை அரசு

மேல்நிலைப்பள்ளியில் தேசிய பசுமைப் படைத் திட்டம் சார்பில், சுற்றுச்சூழல் கருத்தரங்கு நடந்தது. இதில், அறிவியல் இயக்க மாவட்ட செயலாளர் ராஜு, சிறப்பு கருத்தாளராக கலந்துகொண்டு பேசுகையில், ""உணவு உற்பத்திக்காக 25 சதவீத நிலப்பரப்பும், 80 சதவீத சுத்தமான நீரும் செலவழிக்கப்படுகிறது. உணவு உற்பத்தியின் போது, 80 சதவீத கார்பன் டை ஆக்ஸைடு வெளியாகிறது. உணவு உற்பத்தியை பெருக்குவதற்காகவும், பூச்சிகளின் தொல்லையை ஒழிப்பதற்காகவும் அதிகளவில் ரசாயன பொருட்கள் பயன்படுத்தப்படுவதால், மண்வளம் பாதிக்கப்படுகிறது. உலக அளவில் ஒரு வினாடிக்கு ஒரு கால்பந்து மைதானம் அளவுள்ள காடுகள் அழிக்கப்படுகிறது. நமது நாட்டில் மூன்று வகை நீர்களில் நீலநீர் மற்றும் பசுமைநீர் 35 சதவீதமும், பழுப்புநீர் 65 சதவீதமும் உள்ளது. தண்ணீர் பயன்பாட்டில் புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி தண்ணீரை சேமிக்க அனைவரும் முன்வரவேண்டும். நாள்தோறும் நாம் பயன்படுத்தும் உணவுப்பொருட்கள் மற்றும் தண்ணீரின் அளவை அறிந்து செயல்பட வேண்டும்," என்றார். தேசிய பசுமைப்படை குன்னூர் கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் லட்சுமிநாராயணன், சுற்றுச்சூழல் தினத்தின் முக்கியத்துவம் குறித்து விளக்கினார். தொடர்ந்து, மாணவ, மாணவியருக்கு "பிளாஸ்டிக்' பொருட்களால் உண்டாகும் விளைவுகள் குறித்து, "ஜக்கு' என்ற குறும்படம் காண்பிக்கப்பட்டது. இதில், பள்ளி ஆசிரியர்கள், பி.டி.ஏ., நிர்வாகிகள், மாணவ மாணவியர் பங்கேற்றனர். பள்ளி தலைமை ஆசிரியர் அமீலியா தலைமை வகித்தார். ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் சவுமியா முன்னிலை வகித்தார்.ஆசிரியை உஷா வரவேற்றார். ஆசிரியர் ஆனந்த் நன்றி கூறினார்.

**பசுந்தீவனத்தால் பால் உற்பத்தி அதிகரிக்கும்; முகாமில் தகவல்**

கரூர்: "பசுந்தீவனத்தால் பால் உற்பத்தி, 10 முதல் 15 சதவீதம் வரை அதிகரிக்கும்' என, பயிற்சி முகாமில் கால்நடை உதவி இயக்குநர் கூறினார். கரூர் மாவட்டம், சின்னதாராபுரத்தில் கால்நடைகளுக்கு உணவுப் பொருளான அசோலா பசுந்தீவனம் வளர்ப்பு குறித்து ஒரு நாள் பயிற்சி முகாம் நடந்தது. இதில், கால்நடை

பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் குழந்தைசாமி தலைமைவகித்து பேசியதவாது. கரூர் மாவட்டத்தில் போதுமான மழை இல்லாததால் வறட்சி மிகுந்துள்ளது. இந்த வறட்சிக் காலத்தில் அசோலாவை அடர் தீவனத்துக்கு மாற்றாக கால்நடைகளுக்கு பயன்படுத்துவதன் மூலம் அவைகளின் உற்பத்திதிறன் அதிகரிக்கும். கறவை மாடுகளில் பால் உற்பத்தி, 10 முதல்,15 சதவீதம் அதிகரிக்கும். பாலில் திடப்பொருள் அதிகம் சேருவதால் பாலுக்கு நல்ல விலை கிடைக்க வாய்ப்புள்ளது. அசோலாவில், 30 சதம் புரதச்சத்து உள்ளதால் கோழிகள் மற்றும் ஆடுகளின் வளர்ச்சியும் அதிகரிக்கும். இவ்வாறு அவர் கூறினார். இந்தப் பயிற்சியில் 50க்கும் மேற்பட்ட கால்நடை உதவி மருத்துவர்கள் மற்றும் 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். பயிற்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் அசோலா வளர்ப்பு குறித்த கையேடு வழங்கப்பட்டது. முகாமில், சின்னதாராபுரம் கால்நடை உதவி மருத்துவர் மோகன்ராஜ், டாக்டர் உமாசங்கர் உட்பட பலர் பங்கேற்றனர்.

**சர்க்கரை ஆலையை கண்டித்து விவசாயிகள் பட்டினி போராட்டம்**

பாபநாசம்: பாபநாசம் அருகே திருமண்டங்குடி திருஆருரான் மற்றும் அம்பிகா சர்க்கரை ஆலைகளின் விரோத போக்கைக் கண்டித்து திருமண்டங்குடி திருஆருரான் சர்க்கரை ஆலை முன் கரும்பு விவசாய பிரிவு செயலாளர் சரபோஜி தலைமையில் விவசாயிகள் பட்டினி போராட்டத்தில் ஈடுபட்டனர். தஞ்சை மாவட்ட காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்க மாவட்ட செயலாளர் விமல்நாதன் முன்னிலை வகித்தார். பட்டினி போராட்டத்தை மாவட்ட துணைத்தலைவர் சின்னதுரை துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் கரும்பு அரவை பருவம் முடிந்த பின்னரும் 125 நாட்களாக கரும்பு விவசாயிகளுக்கு பணம் தராமல் 85 கோடி ரூபாய்க்கு மேல் நிலுவை வைத்துள்ள திரு ஆருரான் சர்க்கரை ஆலை, அம்பிகா சர்க்கரை ஆலைகளின் விவசாய விரோத போக்கினையும், சட்ட விதிகளை மீறிய ஆலைகளின் மீது நடவடிக்கை எடுக்காத ஆலைகளுக்கு துணை செல்கின்ற மாவட்ட, மாநில அதிகாரிகளின் விரோத செயலைக் கண்டித்தும், சர்க்கரை ஆலைகளை அரசே எடுத்து நடத்த வலியுறுத்தியும் கோரிக்கைகள் நிறைவேறும் வரை பட்டினிபோராட்டம் நடத்தப்படும் என்று போராட்டத்தில் பங்கேற்ற

நிர்வாகிகள் தெரிவித்தனர்.

போராட்டத்தில், விவசாய சங்க நிர்வாகிகள் முருகேசன், ஆதிகலியபெருமாள், மகாலிங்கம், உத்திராபதி, வாசுதேவன் உள்ளிட்ட ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர்.

**திருமண தாம்பூலமாக விதை நெல் கொடுத்து விவசாயி அசத்தல்**

திருவாரூர் :திருமண விழாவில் பங்கேற்ற விவசாயிகளுக்கு, தாம்பூலமாக, 2 கிலோ விதை நெல் வழங்கிய விவசாயியின் செயல், அனைவரையும் வியப்படைய வைத்தது.

திருவாரூர் மாவட்டம், திருக்குவளையைச் சேர்ந்தவர், காவிரி விவசாய பாதுகாப்புச் சங்க துணை செயலர் லட்சுமணன். இவர், தன் மகள் திருமண விழாவில் பங்கேற்ற விருந்தினர்களுக்கு, பாரம்பரிய நெல் விதைகளான, மாப்பிள்ளை சம்பா, கருடன் சம்பா மற்றும் கவுனி என, நெல் விதைகளை, "பேக்' செய்து வழங்கினார்.

மணமக்கள் இருவரும், பொறியியல் பட்டதாரிகள். தாம்பூலத்திற்கு பதில், நெல் விதை வழங்கியதைக் கண்டு, நண்பர்கள், உறவினர்கள் மற்றும் திருமணத்திற்கு வந்தவர்கள் மகிழ்ந்தனர்.

டெல்டா மாவட்ட விவசாயிகள், இயற்கை சீற்றங்களுக்கு ஏற்ப, விவசாயம் செய்யும் நிலையில் உள்ளனர். இந்நிலையில், அனைத்து சூழல்களையும் தாங்கி வளரக் கூடிய விதை நெல், 2 கிலோவை, திருமண தாம்பூலமாக, 867 பேருக்கு வழங்கியதை கண்டு, விழாவில் பங்கேற்ற விவசாயிகள், வியப்படைந்தனர்.

இதுகுறித்து, "நம் நெல்லை காப்போம்' மாநில ஒருங்கிணைப்பாளர், ஜெயராமன் கூறுகையில், "திருந்திய நெல் சாகுபடி முறையில், ஒரு ஏக்கருக்கு, 2 கிலோ விதை நெல் போதுமானது; ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் தேவையில்லை. மறு சாகுபடிக்கும், இந்த விதை நெல்லை பயன்படுத்த முடியும்' என, கூறினார்.

**நத்தத்தில் மழையில்லை பருத்தி விவசாயம் பாதிப்பு**

நத்தம்:நத்தத்தில் போதிய மழையில்லாததால், பருத்தி சாகுபடி செய்த விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நத்தம், சாணார்பட்டி பகுதிகளில் கடந்த 2012 ல் மழையில்லாததால், விவசாயக்கிணறுகளில் தண்ணீர் பற்றாக்குறை காணப்பட் டது. இப்பகுதிகளில் 200 ஏக்கர் வரை நிலங்களில் பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது.

நத்தம் பகுதிகளில் ந.புதுப்பட்டி, மணக்காட்டூர். செந்துறை மற்றும் சுற்றுவட்டார கிõமங்களில் இறவை மற்றும் மானாவாரி பருத்தி பயிர் செய்யப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் தண்ணீர் வசதியிருந்தால் ஒரு ஏக்கருக்கு 100 முதல் 150 கிலோ பருத்தி மகசூல் கிடைக்கும். ஆனால், மழையில்லாததால், தண்ணீர் வசதியின்றி, செடிகள் காய்ந்து மகசூல் குறைந்து ள்ளது. ஒரு ஏக்கருக்கு 60 கிலோவரை தான் மகசூலாகிறது.

பருத்தி மகசூல் குறைந்தது ஒருபுறம் என்றால், விலையும் இல்லை. கிலோ ரூபாய 45 வரை விற்கப்படுகிறது. ஆனால், குறைந்தது கிலோ ரூ.50 முதல் 60 வரை விற்றால் தான் விவசாயிகளுக்கு, செலவழித்த தொகை போக லாபம் கிடைக்கும். போதிய விலை கிடைக்காமல் விவசாயிகள்பாதிக்கப்பட்டுள்ளனர்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

திண்டுக்கல்:விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஜூன் 21 காலை 10 மணிக்கு கலெக்டர் அலுவலகத்தில் நடக்கிறது.

கலெக்டர் வெங்கடாசலம் தலைமை வகிக்கிறார். வேளாண்மைத்துறை, மின்வாரியம், பொதுப்பணித்துறை உள்ளிட்ட அனைத்து துறை அதிகாரிகள் பங்கேற்கின்றனர். கடந்த கூட்டத்தில் கொடுக்கப்பட்ட மனுக்கள் மீது பதிலளிக்கப்படவுள்ளது. விவசாயிகள் தங்கள் குறைகள் குறித்த மனுக்களை இரண்டுநகல்களாக தரும்படியும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

**மானாவாரி சாகுபடி விவசாயிகள் புலம்பல் மழை கிடைத்தும் பலன் இல்லை**

கம்பம்: கடந்த இரண்டு மாதங்களாக மழை இல்லாததால்,மாவட்டத்தில் எள் உள்ளிட்ட மானாவாரி பயிர்கள் காய்ந்து விட்டதால், தற்போது மழை கிடைத்தும் பலன் இல்லை, என்று மானாவாரி விவசாயிகள் புலம்பி வருகின்றனர்.

ஆற்றுப் பாசனம், கிணற்று பாசனத்திற்கு இணையான பரப்பில், மாவட்டத்தில் மானாவாரி காடுகளில் விவசாயம் நடக்கிறது.கூடலூரில் ஆரம்பித்து கம்பம், புதுப்பட்டி, அனுமந்தன்பட்டி, காக்கில்சிக்கையன்பட்டி, கோவிந்தன்பட்டி, கோம்பை, பண்ணைப்புரம், தேவாரம்,ஆண்டிபட்டி, என அனைத்து ஊர்களை சேர்ந்த விவசாயிகள், மானாவாரி காடுகளில் உளுந்து, சூரியகாந்தி, எள், துவரை, கொட்டை முந்திரி, நிலக்கடலை உள்ளிட்ட பல பயிர்களை சாகுபடி செய்வார்கள். கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததால், விவசாயம் முழுவதும் கைவிடப்பட்டது. இருந்த போதும், கடந்த ஏப்ரல் மாதம் எள் பரவலாக விதைப்பு செய்யப்பட்டது.முன்னதாக உழவு , விதைப்பு, உரம் வைத்தல் போன்ற பணிகளில் விவசாயிகள் தீவிரம் காட்டினார்கள். ஏப்ரல், மே மாதங்களில் முழுவதும் மழை இல்லாமல் போய்விட்டது.

இதனால், விதைப்பு செய்த எள் பயிர்கள் மண்ணோடு மண்ணாகி விட்டன. தற்போது கடந்த ஒரு வாரமாக சாரல் பெய்து வருகிறது. இந்த சாரலால் பயன் ஏதும் இல்லை, என்று விவசாயிகள் புலம்புகின்றனர். விவசாயிகள் கூறியதாவது: இரண்டு மாதங்களாக மழை இல்லாததால், விதைப்பு செய்த பயிர்கள் செத்து விட்டன. தற்போது மழை கிடைத்து வருகிறது. சில விவசாயிகள் மறுஉழவு செய்து மீண்டும் விதைப்பு செய்கின்றனர். இதனால் விவசாயிகளுக்கு இரட்டிப்பு செலவு ஏற்பட்டுள்ளது. பல விவசாயிகள் ஏற்கெனவே கடன் வாங்கி செலவு செய்து இருப்பதால், மீண்டும் விவசாயம் செய்ய முடியாது என்று, புலம்பி வருகின்றனர். விவசாயத்துறையினர் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, நஷ்ட ஈடு கிடைக்க பரிந்துரை செய்ய வேண்டும்.

விவசாயத்துறையினர் கூறுகையில்,

" பயிர் காப்பீட்டு திட்டத்தில் காப்பீடு செய்து கொள்ளுங்கள், என

விவசாயிகளிடம் கூறினால், ஏற்க மறுக்கின்றனர்.

காப்பீடு செய்திருந்தால், எளிதாக நஷ்ட ஈடு பெறலாம். இருந்த போதும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் குறித்து கணக்கெடுத்து, அரசுக்கு பரிந்துரை செய்வோம்,' என்றனர்.

**காய்கறிகளுக்கு ""குட்- பை" கீரைகளுக்கு ""வெல்கம்"**

தேனி:காய்கறிகளின் விலை மலைக்க வைக்கும் அளவுக்கு உயர்ந்திருப்பதால், பெரும்பாலானோர், கீரைகளை வாங்கி நிதி நிலைமையை சமாளித்து வருகின்றனர்.

தேனியில் இதுவரை இல்லாத அளவுக்கு காய்கறிகளின் விலை உயர்ந்துள்ளது. காய்கறிகளின் விளைச்சல் பற்றாக்குறையால் விலைகள் கிடுகிடுவென உயர்ந்துள்ளன. சாதாரண மக்களின் வாங்கும் சக்தியை விட காய்கறிகள் விலை அதிகமாக உள்ளது.

உழவர்சந்தையிலும் விலைகள் அதிகமாக உள்ளது. உழவர்சந்தை விலை நிலவரம் கிலோ, ரூபாயில்: கத்தரி- 28, தக்காளி- 35, அவரைக்காய்- 30, கொத்தவரை- 16, சுரைக்காய்- 8, புடலங்காய்- 28, பாகற்காய்- 40, பீர்க்கங்கய்- 20, முருங்கை- 30, பூசணி- 12, பச்சை மிளகாய்- 36, சம்பா மிளகாய்- 30, தேங்காய்- 10, நூக்கல்- 20, முள்ளங்கி- 16, முருங்கை பீன்ஸ்- 70, பட்டர்பீன்ஸ்- 65, சோயாபீன்ஸ்- 60, செலக்ஷன் பீன்ஸ்- 60, முட்டைக்கோஸ்- 24, கேரட்- 35, டர்னிப்- 30, சவ்சவ்- 20, காலிபிளவர்- 15, உருளைக்கிழங்கு- 24, சேனை- 30, கறிவேப்பிலை- 28, மல்லி- 40, புதினா- 25, சின்னவெங்காயம்- 80, பல்லாரி- 22, இஞ்சி- 200, பூண்டு- 88, கீரை வகைகள் சராசரியாக 3 ரூபாய் முதல் 5 ரூபாய் வரை.

நேற்று சந்தைக்கு 33 டன் காய்கறிகள் வந்தது. 8 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. காய்கறிகளின் விலைகள் அதிகமாக உள்ளதால், பெரும்பாலான பொதுமக்கள் கீரைகளை வாங்கிச் சென்றனர்.

**மானிய விலையில் சொட்டு நீர்பாசனம்**

ராஜபாளையம்:ராஜபாளையம் பகுதியில் தோட்டக்கலை பயிர் வளர்ப்பிற்காக, நூறு சத மானியவிலையில், விவசாயிகளுக்கு சொட்டு நீர்பாசனம் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

இதற்கான மனுவுடன், தாசில்தார் அலுவலகத்தில் பெறப்பட்ட சான்றிதழ்களை இணைத்து, ராஜபாளையம் புகழேந்தி ரோட்டில் உள்ள உதவி இயக்குனர் அலுவலகத்தில் விண்ணப்பிக்கவேண்டும்.

மேலும் விபரங்களுக்கு, அதே அலுவலகத்தில் தொடர்புகொள்ளுமாறு, உதவிஇயக்குனர் ரவீந்திரன் கேட்டுள் ளார்.

**விவசாய மலர்**

**கோழிகளைத் தாக்கும் நோயும் குருணைத்தடுப்பு மருந்தும்**

"வெள்ளைக் கழிச்சல்' என்பது கோழிகளைத் தாக்கும் ஒரு கொடிய தொற்று நோய். இந்நோயை பொதுவாக நம் நாட்டில் "ரணிக்கெட்' நோய் என்றும், தமிழகத்தில் வெள்ளைக் கழிச்சல், கொக்கு நோய் என்று அழைப்பர். இந்நோய் வைரஸ் எனப்படும் நச்சுயிரியால் ஏற்படுகிறது.இந்நோயினை உருவாக்கும் நச்சுயிரியானது கோழிகளின் உடலில் இருந்து சளி மற்றும் எச்சங்கள் மூலமாக வெளியேற்றப்படுகிறது. இந்நச்சுயிரி கலந்த சளி மற்றும் எச்சங்கள் கோழிகளுக்கு அளிக்கப்படும் தீவனம், குடிநீர், உபகரணங்கள், படுக்கைப் பொருட்கள், காற்று ஆகியவற்றில் கலந்து ஒரு கோழியிலிருந்து மற்றொன்றுக்கும், ஒரு பண்ணையில் இருந்து மற்றொரு பண்ணைக்கும் இந்நோய் வேகமாக பரவுகிறது.

இந்நோயின் நச்சுயிரியானது கோழிகளின் சுவாச, நரம்பு, உணவு, ஜீரண மண்டலங்களை தாக்குகின்றன. நோயுற்ற கோழிகளில் இருமல், சளி, காய்ச்சல் போன்ற அறிகுறிகள் காணப்படும். இது, நூறு சதவீதம் இறப்பினை ஏற்படுத்துகின்றது. நோயினால் இறந்த கோழிகளை ரத்தப் பரிசோதனை செய்தால், கோழிகளின் சுவாசக் குழல் சிவந்து காணப்படும். குடலின் உட்புறச் சவ்வு வீக்கமடைந்து புண்களுடனும், ரத்த கசிவுகளுடனும் இருக்கும். உணவு

செரிமான இரைப்பையில் ரத்தப் புள்ளிகள் காணப்படும்.
இந்நோய், கோழிகளின் முட்டை உற்பத்தியையும், முட்டையில் தரத்தையும் பெருமளவு பாதிக்கின்றது. இதனால், மிகுந்த பொருளாதார இழப்பீட்டினை கோழிப் பண்ணையாளர்கள் சந்திக்கின்றனர்.

தடுப்பூசிகள்: இந்நோய் வரும்முன் காப்பதே சிறந்தது. அதற்காக பல்வேறு தடுப்பூசிகள் தற்போது நடைமுறையில் உள்ளன. லசோட்டா, ஆர்.டு.பி., ஆர்.டி.வி.கே., பி1 போன்ற தடுப்பூசிகள் கோழிகளுக்கு பல்வேறு கால கட்டங்களில் போடவேண்டும்.

இத்தகைய தடுப்பு மருந்துகளை பயன்படுத்தும் போது கோழிகளை பிடிப்பதற்கு ஒருவரும், தடுப்பூசி அளிப்பதற்கு மற்றொருவரும் தேவைப்படுகின்றனர். மேலும், இவ்வாறு தடுப்பூசி அழிப்பதற்கு, கோழிகளை பிடிக்கும் பொழுதும், ஊசி குத்தும் பொழுதும் கோழிகள் மிகுந்த வேதனைக்குள்ளாகின்றன. மேலும் ஊசி குத்தும்பொழுது ஊசியானது கோழியினை பிடிப்பவர் கைகளிலோ அல்லது ஊசி குத்துபவர் கைகளிலோ காயத்தை ஏற்படுத்த வாய்ப்பு உள்ளது. தடுப்பு மருந்தும் வீணாகிறது. நேரமும் விரயமாகிறது.

தடுப்பு மருந்துகளை குளிர்சாதனப் பெட்டியில் வைத்திருக்கும் போது நீண்ட நேரம் மின்வெட்டு ஏதேனும் ஏற்பட்டால் அவற்றின் வீரியம் குறைந்து பயனற்று போவதற்கும் வாய்ப்புள்ளது.

குருணைத் தடுப்பு மருந்து: இத்தகைய குறைபாடுகளை களைந்தெடுத்து "ஒரே நோய்; ஒரே மருந்து' என்ற கருத்தின் அடிப்படையில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை உருவாக்கிய படைப்புதான் கோழிகளைக் காக்கும் குருணைத் தடுப்பு மருந்து.

இது உருளை வடிவத்தில் இருக்கும். இம்மருந்தினை கோழிகளுக்கு அளிக்க ஊசி தேவையில்லை. இதனை மூன்று வழிகளில் கோழிகளுக்கு அளிக்கலாம். ஒரு குருணையை எடுத்து கோழிகளின் வாயில் வைத்து விட்டால் கோழிகள் அதனை விழுங்கி விடும். சுத்தமான காகிதத்தை விரித்து அதில் ஒரு கோழிக்கு ஒரு குருணை என்ற விகிதத்தில் பரப்பிவிட்டால், தாமாகவே வந்து குருணைகளை எடுத்துக்கொள்ள வாய்ப்புள்ளது. இதனால், எவ்வித பக்கவிளைவும் ஏற்படாது. இக்குருணை மருந்தை, கோழிகளுக்கு அளிப்பதற்கு ஊசிகள் தேவையில்லை.

கோழிகளை அடிக்கடி பிடித்து சிரமப்படுத்த வேண்டியதில்லை. பத்து நாள் வயதிற்கு மேல் உள்ள அனைத்து கோழிகளுக்கும் இம்மருந்தினை அளிக்கலாம். பின்னர் மூன்று மாதத்திற்கு ஒருமுறை இதனை அளித்தால் போதுமானது. குளிர்சாதன பெட்டியில் வைத்திருக்கும்போது, மின்வெட்டு ஏற்பட்டாலும் மருந்தின் வீரியத்தன்மை பாதிக்கப்படுவதில்லை. இத்தகைய அரிய தடுப்பு மருந்தினைப் பயன்படுத்துவதன் மூலம் கோழிகளை வெள்ளைக் கழிச்சல் நோயிலிருந்து பண்ணையாளர்கள் காப்பாற்றலாம்.

**சின்னச்சின்ன செய்திகள்**



**தக்காளி ஒட்டு ரகங்கள்:** கோ.டி.எச்2 - தக்காளி இலைச்சுருட்டை நோய் எதிர்ப்புத்திறன் கொண்டது. கோ.டி.எச்3 - தக்காளி இலைச்சுருட்டை அல்லது நூற்புழு எதிர்ப்புத்திறன் கொண்டது. தரமான நாற்று உற்பத்திக்கான சமுதாய நாற்றங்கால்

**நிழல் வலைக்குடில்:** வெண்கலன் (95 குழிகள் கொண்டது) 240 எண்ணிக்கை/எக்டர். வளர் ஊடகம் - தென்னை நார்க்கழிவு 300 கி + 5 கி வேப்பம்புண்ணாக்கு + நிலையில் / விதைத்த (அ) பாஸ்போ பாக்டீரியா ஒவ்வொன்றும் (1கி) நாற்றங்கால் நிலையில்/ விதைத்த 15 நாட்களுக்குப் பின் தெளித்த 19:19:19 + நுண்ணூட்டச்சத்து கலவை (அ) 0.5 சதவீதம். நடவு நாற்று எண்ணிக்கை**பராமரித்தல்:** 120 செ.மீ. அகலமும், வசதியான அளவு நீளமும் கொண்ட மேட்டுப்பாத்திகளில் நடவேண்டும். நாற்று எண்ணிக்கை 23,334/எக்டர்

இருக்குமாறு இரட்டை வரிசையில் 90 து 60 து 60 செ.மீ. இடைவெளியில் நடவேண்டும்.

**சொட்டுநீர் உரப்பாசனம் (அ) மூடாக்கு போடுதல்:**சொட்டுநீர் பாசனக் கருவியை அமைத்து பக்கவாட்டு குழாய்களை பாத்தியின் நடுவில் இடவேண்டும். தண்ணீரில் கரையும் உரங்கள் (அ) 200:250:250 கிகி தழை, மணி, சாம்பல் சத்து/ எக்டர் உரப்பாசனம் மூலம்.

**குண்டுமல்லி ஏற்றுமதிக்கான பெட்டகப்படுத்தும்**

**தொழில்நுட்பம்:** குண்டுமல்லிமலர்களை ஏற்றுமதி செய்வதற்கு உகந்த பெட்டகப்படுத்தும் முறை உருவாக்கப்பட்டுள்ளது. நன்கு முற்றிய விரியாத மலர்களை அதிகாலை 7 மணிக்கு முன்னரே பறிக்க வேண்டும். பின் இம்மொட்டுக்கள் உடனடியாக ஏற்றுமதி நிலையத்திற்கு மதிப்புக் கூட்டலுக்காக கொண்டுவரப்படுகின்றன.

தொலைதூர சந்தைகளுக்கு மலர் மொட்டுக்கள் சரமாக கட்டப் படுகின்றன. அவை 4 சதம் போரிக் அமிலத்தில் நனைக்கப்பட்டு, பின் அவை 30 செ.மீ. நீளத்திற்கு துண்டுகளாக்கப்பட்டு, 5 துண்டுகளாக சிறிய 11து35து4 செ.மீ. அளவுள்ள அலுமினியம் அடித்தளம் கொண்ட அட்டைப் பெட்டியினுள் காகிதத்தின் உதவியுடன் தெர்மோகோல் பெட்டியினுள் 3 அடுக்குகளாகவும் அவற்றின் இடையே மற்றொரு அடுக்கை ஐஸ்ஸெல் கொண்ட தாளையும் வைக்க வேண்டும். பின்னர் பெட்டியை மூடி ஒட்டுநாடாவால் ஒட்டவேண்டும். இத்தொழில்நுட்பம் மூலம் மல்லிகை மலர்கள் அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

துபாய் போன்ற அண்டைநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு 210 செ.மீ. நீளம் கொண்ட மல்லிகை சரங்களை 4 சதவீத போரிக் அமிலத்தில் நனைத்து பட்டர் பேப்பர் அடித்தளத்துடன் காற்றோட்டத்திற்கான ஓட்டைகள் கொண்ட அட்டைப்பெட்டியினுள் வைத்தும் பெட்டகப் படுத்தப்படுகின்றன. இந்த தொழில்நுட்பத்தின் மூலம் அறுவடைக்குப் பின்தான் மல்லிகை மலர் சேதத்தை 40 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாகக் குறைக்கலாம். மேலும் மலர்கள் 72 மணி நேரம் வாடாமல் பாதுகாக்கப் படுகின்றன. சாதாரண முறையில் இது எடை, அளவு

குறைகிறது. இதனால் ஏற்றுமதியாளர்கள் அதிக லாபம் பெறலாம். (தகவல்: த.வே.ப.கழகத்தின் உழவர் பெருவிழா கையேடு 2013)

**பாகல் சாகுபடி சிறு விவசாயிகளுக்கு ஓர் வரப்பிரசாதம்**



பாகற்காய் சாகுபடி பொதுவாக விவசாயிகளுக்கு லாபம் தரும் பயிர்தான். வியாபார ரீதியாக சாகுபடி செய்வதற்கு நீட்டு பாகற்காய் மிக சிறந்ததாகும். இவ்வகை பாகல் சாகுபடிக்கு தண்ணீர் குறைவாக தேவைப்படுகிறது. வேலை ஆட்கள் அதிகம் தேவை இல்லை. களை குறைவான பயிர். அதிக செலவு செய்து பந்தல்போட்டு பாகல் சாகுபடியை விவசாயிகள் செய்கிறார்கள். இந்த பந்தல்களை ஐந்து முறைகள் சாகுபடி செய்வதற்கு உபயோகப்படுத்திக் கொள்ளலாம். விருந்துக்கு உதவாத காய் மரந்துக்கு உதவும் என்பார்கள். சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கும் எடை குறைக்க விரும்புபவர்களுக்கும் தாய்மார்களுக்கும் சிறந்த சத்தான காய். விலை மலிவான காய் என்றுகூட சொல்லிவிடலாம். செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்கள் தவிர மற்ற மாதங்களில் சாகுபடி செய்யலாம். பாகல் சாகுபடி செய்ய நல்ல புழுதி உழவும், தொழு உரமும் அவசியம் தேவை. ரசாயன உரங்கள் அதிகமாக உபயோகிக்கும் போது மகசூல் கூடுதலாகக் கிடைக்கும். காய்களின் பசுமைத் தன்மை மூன்று நாட்கள்தான் இருக்கும். இதை ஆங்கிலத்தில் கீப்பிங் குவாலிட்டி என்று சொல்வார்கள்.

ரகங்கள்: சங்ரோ விவேக், செமினிஸ், அபிஷேக், நுண்கம்ஸ், அம்மன்ஜி, மஹிக்கோ, வென்சுரா, எம்ஏஎச்101, அங்கூர் பராக் போன்ற ரகங்கள் பாகல் சாகுபடி செய்வதற்கு ஏற்றது. பாகல் வயது 160 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை ஆகும். விதை ஏக்கருக்கு 300 கிராம் தேவைப்படுகிறது. விதைப்பதற்கு முன் 24 மணி நேரம் தண்ணீரில் ஊறவைத்து தான் நடவுசெய்ய வேண்டும். ஏனெனில்

இதன் சதைப்பற்று கடினமாக இருக்கும். இதனால் விதை மேலேயே நின்றுவிடும். விதைகள் ஈரப்பதம் கிடைக்காமல் முளைப்புத்திறன் குறைய வாய்ப்பு உள்ளது. மேலே இருந்தால் எலிகள், அணில்கள் தோண்டி எடுத்து வீணாக்கிவிடும். இதைக் கருத்தில் கொண்டு சுமார் 30 மணி நேரம் ஊறவைத்த விதைகள் நடவு செய்யும்போது விதைகள் வீணாவது குறைவு. ஒரு விதை ஒரு ரூபாய் ஆகின்றது. இதனால் இந்த எளிய தொழில்நுட்பத்தை பின்பற்றினால்தான் பயிர் எண்ணிக்கையை பராமரிக்க முடியும்.

நடவுமுறை:பொதுவாக தனி பயிர்தான் பாகல் சாகுபடியில் உள்ளது. வரிசை முறையில் 7 அடி து 7 அடி இடைவெளிவிட்டு வாய்க்கால் அமைத்து அந்த கரை மீதுதான் விதை நடவு செய்வார்கள். தண்ணீர் வசதி மண்வளத்திற்கு ஏற்ப பாசனம் செய்ய வேண்டும். இதில் முன்னோடி விவசாயிகள் உளுந்தை வரிசையில் வாய்க்கால் வரப்பு ஓரங்களில் சாகுபடி செய்து 70 நாட்களில் 200 கிலோ வரை மகசூல் எடுத்து சாதனை படைத்த விவசாயிகள் உள்ளனர். திண்டிவனம் அருகில் உள்ள ஊரல் கிராமத்தில் குப்புசாமி உளுந்து சாகுபடியில் அதிக மகசூல் எடுத்துள்ளார்.

இதில் உளுந்து, பச்சைப்பயறு சாகுபடி செய்யும் போது அசுவணி பூச்சி பாகலில் குறைவாக உள்ளது. இது நமக்கு நல்ல வாய்ப்பு. 70 நாட்கள் உளுந்தை அறுவடை செய்தபின்னர்தான் பாகல் கொடிகள் பந்தலில் படர ஆரம்பிக்கும். அப்போது விவசாயிகளின் வசதியை ஒட்டி சவுக்கு மிலார் பந்தல், மூங்கில் பந்தல், நைலான் ஒயர் பந்தல், கல் நடவு செய்து சாகுபடி செய்வார்கள். மேற்கண்ட பந்தல்கள் சுமார் ஐந்து வருடங்கள் வரை உபயோகிக்கலாம்.

பயிர் பாதுகாப்பு: இதில் பழ அழுகல் நோய்தான் அதிகம் காணப்படுகின்றது. இதற்கு கார்பன்டை ஆசிம் என்ற நோய் மருந்தை அவ்வப்போது உரிய பரிந்துரைப்படி மேற்கொண்டால் போதுமானது. மற்றபடி பவர் தெளிப்பான் கொண்டு பூச்சிக்கொல்லிகளை கட்டுப்படுத்துவதற்கு பதில் குருணை பூச்சிக்கொல்லி மருந்துகளை திம்மெட் 10% கார்போ பியூரிடான் 3% போன்ற பூச்சிக்கொல்லிகளை ரசாயன உரங்கள் வைக்கும்போது சேர்த்து வைப்பதால் வேலை ஆட்களின் செலவை குறைக்கலாம். பவர் தெளிப்பானுக்கு தேவையான பெட்ரோல் செலவை குறைப்பதோடு வேர் வழியாக பூச்சிக்கொல்லிகள்

செல்வதால் சீரான வளர்ச்சியுடன் செடிகள் வளருகின்றன.

காய்களின் நிறம், சந்தை நிலவரம்: விற்பனையின்போது கிலோ ரூ.40 என்றால் நுகர்வோர்கள் கால் கிலோதான் வாங்க விரும்புவார்கள். ஆனால் ஒரு காயின் எடை 150 முதல் 200 கிராம் வரை இருக்கும். ரகங்களால்தான் விவசாயிகளுக்கு கூடுதல் மகசூல் கிடைக்கும். 250 கிராம் காய் வாங்கும் நடுத்தர குடும்பத்தினருக்கு உதவியாக இருக்கும்.

பாகல் சாகுபடி செலவு

உழவு, பார் அமைப்பு ரூ. 5,000.00

விதை, உரம், பயிர் பாதுகாப்பு ரூ. 5,000.00

நீர் நிர்வாகம், காவல், களை ரூ. 6,000.00

பந்தல்முறை, பிளாஸ்டிக் ரோப் ரூ. 15,000.00

அறுவடை + போக்குவரத்து (60 நாட்கள்)

ரூ.18,000.00

மொத்த செலவு ரூ. 49,000.00

உளுந்து ஊடுபயிர் சாகுபடி செய்து கூடுதல்
மகசூல் கிடைத்தால்

= 200 கிலோ து ரூ.50 வரவு ரூ. 10,000.00

பாகல் சாகுபடியில் 60 நாட்கள் அறுவடையில்

10 டன் மகசூல். விற்பனை விலை ரூ.10 என்று

கணக்கில் எடுத்துக்கொண்டால் 10 டன் து ரூ.10

ரூ.1,00,000.00

உளுந்து சாகுபடியில் கிடைத்த மகசூல் ரூ. 10,000.00

மொத்த வருமானம் ரூ. 1,10,000.00

பாகல் சாகுபடி மொத்த செலவு ரூ. 49,000.00

நிகர லாபம் ரூ. 61,000.00

பாகல் சாகுபடியில் கூடுதல் லாபம் கிடைக்க வழிகள்:

காய்கறிகளை சந்தைப்படுத்துதல்: வீரிய ரகங்கள் அனைத்தும் பலாப்பழத்தில் எப்படி மேல்பகுதி முழுவதும் முள் போன்று உள்ளதோ அதுபோன்று முட்கள் பகுதி பாகலில் உள்ளது. கோணியில் பேக்கிங் செய்து கோணியில் அடுக்கி அனுப்பும்போது இந்த முட்கள் போன்ற பகுதி உடையாதவண்ணம் அனுப்பினால்தான் பார்ப்பதற்கு காய்கள் பசுமையாக இருக்கும். இல்லையேல் தரம் இரண்டு என்று விலை குறைய வாய்ப்பு உள்ளது.

வேன்களில் செல்லும்போது மூடைகள் அதிக உயரம் அடுக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த கவனிப்பு நம்முடைய உற்பத்தி பொருள் கூடுதல் விலை கிடைப்பதற்கான வழிகளாகும். காய்கறி சாகுபடி வல்லுனர் ஆர்.பாண்டியன் (பெர்ட்டிலைசர் டிப்போ, 131-132, செஞ்சி ரோடு, திண்டிவனம்-604 001, 98423 23075) பாகல் சாகுபடி செய்து மற்ற விவசாயிகளை நல்ல லாபம் எடுக்க ஊக்குவித்து வருகிறார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**19.06.2013 A.M**

---

## விவசாயிகள் ஆர்ப்பாட்டம்



திருவாரூர்: மீத்தேன் எரிவாயு எடுக்கும் திட்டத்தை கைவிட கோரி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் நேற்று 4 இடங்களில் ஆர்ப்பாட்டம் நடந்ததுதிருவாரூரில் மாவட்ட செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி, மாவட்ட தலைவர் ஆர்.வீரமணி, திருத்துறைப்பூண்டியில் எம்எல்ஏ உலகநாதன், மன்னார்குடியில் மாவட்ட பொறுப்பு தலைவர் வீரமணி, கோட்டூரில் மாவட்ட துணைச் செயலாளர் பாண்டியன் ஆகியோர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. நீர், நிலம், காற்று ஆகியவற்றை மாசுபடுத்தி, காவிரி டெல்டா பகுதியை பாலைவனமாக்கும் மீத்தேன் எரிவாயு எடுக்கும் திட்டத்துக்கான அனுமதியை மத்திய அரசு ரத்து செய்ய வேண்டும், ஆறுகளை தூர் வாரி கரைகளை பலப்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது.

## வினாடிக்கு 680 கன அடி வீதம் வருகிறது ஆழியார் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு

பொள்ளாச்சி, : மேற்குதொடர்ச்சி மலைபகுதியில் கனமழையால், ஆழியார் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 680கன அடியாக அதிகரித்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். பொள்ளாச்சியை அடுத்த ஆழியார் அணைக்கு, பரம்பிகுளம் அணையிலிருந்து காண்டூர் கால்வாய் மூலமாகவும், நீர் தேக்கப்பகுதிகளில் இருந் தும் தண்ணீர் வருகிறது. ஆழியார் அணையில் இருந்து பொள்ளாச்சியை சுற்றியுள்ள புதிய மற்றும் பழைய ஆயக்கட்டுகளுக் கும், வேட்டைக்காரன்புதூர், சேத்துமடை, பொள் ளாச்சி கால்வாய்களுக்கும் தண்ணீர் திறக்கப்படுகிறது.

ஆற்றில் திறந்துவிடப்படும் தண்ணீர் விவசாயத்துக்கு மட்டுமின்றி குடிநீர் தே¬வைக்கும் பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் கோடை காலத்தில், பிஏபி.,திட்டத்தில் உள்ள அணைகளில் நீர்மட்டம் குறைந்து இருக்கும். ஆனால், ஆழியார் அணையில் விவசாய பாசனத்துக்கும், குடிநீர் தேவைக்கும் தண்ணீர் எப்போதும் தேக்கி வைக்கபட்டிருக்கும். இதனால் மற்ற அணைகளின் நீர் மட்டும் மிகவும் குறைந்திருக்கும் போது, ஆழியார் அணையில் கடல்போல் தண்ணீர் இருக்கும்.

ஆனால், கடந்த ஆண்டு பொழியவேண்டிய பருவமழை எதிர்பார்த்த அளவில் இல்லை, மேலும் நீர்தேக்க பகுதியிலிருந்து தண்ணீர் வரத்து மிகவும் குறைந்தது. இதனால் ஆழியார் அணையின் நீர்மட்டம் நாளுக்கு, நாள் குறைந்து வந்தது. ஆழியார் அணைக்கு தண்ணீர் வரத்து குறைந்ததால், அணையின் பெரும்பாலான பகுதி பாறை மற்றும் மணல் மேடுகளாக காட்சியளித்தது. அணை யின் நீர்மட்டம் மிகவும் குறைந்தால் பாசனபகுதிகளுக்கு தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டது. 120அடி நீர்மட்டம் கொண்ட ஆழியார் அணைக்கு, கடந்த வாரம் 45கன அடி தண்ணீரே வந்து கொண்டிருந்தது. அப்போது, நீர்மட்டம் 53.80அடியாக குறைந்திருந்தது.

இந்நிலையில் கடந்த சில வாரங்களாக மேற்குதொடர்ச்சி மழைபகுதியில், தென்மேற்கு பருவமழை தொடர்ந்து பெய்தது.

கனமழையால், நீர்பிடிப்பு பகுதியிலிருந்து அணைக்கு தண்ணீர் வர ஆரம்பித்தது. தற்போது அணைக்கு 680கனஅடி(வினாடிக்கு) வீதம் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. நீர்மட்டம் 58.30 அடியாக உயர்ந்துள்ளது. ஒருவாரத்தில், 5அடி வரை உயர்ந்துள்ளது.

மேற்கு தொடர்ச்சி மலைபகுதியில் பருவமழை தொடர்ந்து பெய்துகொண்டிருப்பதால், அணைக்கு நீர் வரத்து இன்னும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என்று விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

## நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த ஒரு மாதத்தில் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்க வேண்டும்

பொள்ளாச்சி, : பொள்ளாச்சி நகரில், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவதற்காக, குடியிருப்பு பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு அமைக்க வேண்டும். ஒருமாதம் காலக்கெடு விடுக்கப்பட்டுள்ளதாக அதிகரிகள் தெரிவித்தனர்.

பொள்ளாச்சி நகராட்சி கூட்ட அரங்கில் நேற்று, மழைநீர் சேகரிப்பு குறித்த விளக்க கூட்டம் நடந்தது. இதற்கு நகர்மன்ற தலைவர் கிருஷ்ணகுமார் தலைமை தாங்கினார். துணைத்தலைவர் விஜயக்குமார் முன்னிலை வகித்தார். நகரமைப்பு அலுவலர் சவுந்தராஜன், கவுன்சிலர்கள் வசந்த், கண்ணன், திருநீலகண்டன் மற்றும் பொதுமக்கள் பலர் திரளாக கலந்து கொண்டனர். கூட்டத்தில் கலந்து கொண்டவர்களிடம், மழைநீர் சேகரிப்பு குறித்து அதிகாரிகள் விளக்கம் அளித்தனர்.

நகராட்சி அதிகாரிகள் கூறுகையில், 'கடந்த ஆண்டில் பருவமழை பொழிவு மிகவும் குறைவாக இருந்தது. இந்த ஆண்டில், இப்போதுதான் பருவமழை பொழிய ஆரம்பித்துள்ளது. இதைதொடர்ந்து நிலத்தடி நீர்மட்டம் உயரும் வண்ணம், மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை நகரில் ஏற்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. நகராட்சிக்குட்பட்ட 36வார்டுகளிலும் அடிக்குமாடி குடியிருப்பு, வணிகவளாகங்கள் உள்ளிட்ட பகுதிகளில் அமைந்துள்ள சிமென்ட் கான்கிரிட் கூரை கட்டிட பகுதிக்கான மழைநீர் சேகரிப்பு அமைப்பை அனைவரும் துவங்கப்பட வேண்டும்.

மழைநீர் சேமிப்பு அமைப்பினை ஏற்படுத்த வார்டுவாரியாக துண்டுபிரசுரம் வினியோகம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, குடியிருப்பு பகுதிகளில் மழைநீர் சேகரிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். இன்னும், ஒரு மாதத்திற்குள் மழைநீர் சேகரிப்பு அமைப்பை 100சதவீதம் முடிக்க வேண்டும். மழைநீர் சேகரிப்பு பகுதிகளை அதிகாரிகள் நேரில் ஆய்வு மேற்கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபடுவார்கள்' என்றார்.

## அமராவதியில் தண்ணீர் திறக்க கரும்பு விவசாயிகள் கோரிக்கை

உடுமலை, : கரும்பு பயிர்களை காப்பாற்ற அமராவதி அணையில் இருந்து தண்ணீர் திறக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு பயிரிடுவோர் சங்கம் சார்பில், அதன் தலைவர் வேலுச்சாமி தமிழக முதல்வருக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறி இருப்பதாவது:
உடுமலை அமராவதி அணை மூலம் மடத்துக்குளம், தாராபுரம் தாலுகாக்களில் 26 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது. பெரும்பாலான விவசாயிகள் கரும்பு பயிரிட்டு, அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு சப்ளை செய்கின்றனர்.
கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் அணை நீர்மட்டம் குறைந்து, கடும் வறட்சி நிலவுகிறது. பொதுமக்களுக்கு மட்டுமின்றி, கால்நடைகளுக்கு கூட குடிநீர் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. ஆழ்குழாய் மூலமும் போதிய தண்ணீர் கிடைக்காததால், தென்னை, கரும்பு பயிர்கள் கருகுகின்றன.
தற்போது மடத்துக்குளம் பகுதியில் விவசாயிகள் கரும்பு நடவு செய்துள்ளனர். இதற்கு உயிர் தண்ணீர் அவசியம் தேவை. தாமதமானால் கட்டை கரும்பு கருகிவிடும். தற்போது தென்மேற்கு பருவமழையால் அணைக்கு தண்ணீர் வர துவங்கி உள்ளது. எனவே, கரும்பு பயிர்களை காப்பாற்ற அணையில் இருந்து 20 நாட்களுக்கு உடனடியாக தண்ணீர் திறந்து விட வேண்டும்.
இவ்வாறு மனுவில் கூறியுள்ளார்.

## நடுவச்சேரி விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண நிதி

அனுப்பர்பாளையம்,:  அவிநாசி அருகே நடுவச்சேரி கிராம பகுதிக்கு உட்பட்ட 892 விவசாயிகளுக்கு ரூ.31.46 லட்சம் மதிப்பில் வறட்சி நிவாரண நிதி வழங்கும் விழா நேற்று நடைபெற்றது.

நடுவச்சேரி தொடக்க வேலாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் நடைபெற்ற விழாவுக்கு கூட்டுறவு சங்க தலைவர் முத்துசாமி, அவிநாசி ஊராட்சி ஒன்றியகுழு தலைவர் பதமநந்தினிஜெகதீசன் ஆகியோர் தலைமை தாங்கினர். அவிநாசி வேளாணமை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்க தலைவர் மு.சுப்பிரமணி, நடுவச்சேரி ஊராட்சிமன்றத்தலைவர் விஜயாசண்முகசுந்தரம், சின்னேரிபாளையம் ஊராட்சி மன்றத்தலைவர் சரவணன்,  கூட்டுறவு சங்க செயலர் சரசுவதி, ஆகியோர் முன்னிலை வகித்தனர்,.

இந்த நிகழ்ச்சியில், அவிநாசி எம்.எல்.ஏ.கருப்பசாமி கலந்து கொண்டு,  நடுவச்சேரி கிராம பகுதிக்கு உட்பட்ட 892 விவசயிகளுக்கு ரூ.. 31.46லட்சம் மதிப்பில் வறட்சி நிவாரண நிதி வழங்கினார்.

## மணிமங்கலம் ஏரியில் விதி மீறி மணல் அள்ளுவதால் விவசாயம் பாதிக்கும் அபாயம் விவசாயிகள் குமுறல்

ஸ்ரீபெரும்புதூர், :

குன்றத்தூர் ஒன்றியம் மணிமங்கலம் ஊராட்சியில் இஸா ஏரி உள்ளது. மணிமங்கலம், மண்ணிவாக்கம், கரசங்கால், தர்காஸ், சேத்துப்பட்டு உள்ளிட்ட பகுதிகளில் உள்ள 1600 ஏக்கர் விவசாய நிலங்களுக்கு நீர் ஆதாரமாக இந்த ஏரி விளங்கி வருகிறது. பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள இந்த ஏரியில் இருந்து சவுடு மண் அள்ள காஞ்சிபுரம் மாவட்ட கனிம வளத்துறை சார்பில் டெண்டர் விடப்பட்டுள்ளது. ஜூன் 17ம் தேதி முதல் ஜூலை 5ம் தேதி வரை மண் அள்ள அனுமதி அளிக்கப்பட்டது. தற்போது விதிமுறை மீறி அளவுக்கு அதிகமாக மண் அள்ளப்படுவதாக புகார் எழுந்துள்ளது.

இதுகுறித்து அப்பகுதி மக்கள் கூறியதாவது, மணிமங்கலம், கரசங்கால் ஆகிய ஊராட்சி எல்லையில் மணிமங்கலம் இஸா ஏரி உள்ளது. இங்கு சவுடு மண் அள்ள கனிமவள துறை சார்பில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த பகுதியில்

தண்ணீர் தேங்கியுள்ளது. இதனால் மணிமங்கலம் ஊராட்சி எல்லையில் விதிமுறை மீறி மண் அள்ளப்பட்டு வருகிறது.
மேலும் 10 பொக்லைன் இயந்திரம் மூலம் சுமார் 15 அடி ஆழத்திற்கு மண் எடுத்து விற்பனை செய்கின்றனர். ஆனால் டெண் டர் எடுத்தவர்கள் மணிமங்கலம் போலீசை வைத்து மிரட்டினர். இதனால் கனிமவள துறை அதிகாரிகள், ஸ்ரீபெரும்புதூர் தாசில்தார், ஆர்டிஓ உள்ளிட்ட அதிகாரிகளுக்கு புகார் கொடுத்தோம். எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.
ஏரியின் மையப்பகுதியில் ஆழமாக மண் எடுப்பதால் மழைநீர் ஒரே இடத்தில் தேங்கிவிடும். இதனால் மதகு வழியாக விவசாய நிலங்களுக்கு தண்ணீர் செல்ல முடியாது. வருங்காலங்களில் விவசாய நிலங்களுக்கு நீர் ஆதாரம் இல்லாமல் போகும் அபாயம் உள்ளது. எனவே ஏரியில் மண் அள்ள தடை விதித்து கலெக்டர் உத்தரவிட வேண்டும் என்றனர்.

## பர்கூர் அருகே பட்டு விவசாயிகளுக்கு கிருமி நீக்க முகாம்

கிருஷ்ணகிரி, : கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அருகே அட்மா திட்டத்தின்கீழ் பட்டு விவசாயிகளுக்கு புழுவளர்ப்பு மனையில் கிருமி நீக்க செயல்விளக்க முகாம் நடந்தது.
கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அருகே பேட்டையன்கொட்டாய் கிராமத்தில் அட்மா திட்டத்தின் மூலம் முருகேசன் என்பவரது பட்டு புழு வளர்ப்பு மனையில் கிருமி நீக்கம் அவசியம் குறித்து செயல்விளக்க முகாம் நடைபெற்றது. பர்கூர் பட்டு வளர்ச்சித்துறை தொழில்நுட்ப சேவை மைய உதவி ஆய்வாளர் சேகர் வரவேற்றார்.
கிருஷ்ணகிரி பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் கதிர்வேலு தலைமை வகித்து, வெண்பட்டு வளர்ப்பு மற்றும் அரசு நலத்திட்டங்கள் குறித்து விளக்கம் அளித்தார். போலுப்பள்ளி மத்திய பட்டு வாரிய விஞ்ஞானி மாசிலாமணி, பட்டு வளர்ப்பு மனையில் கிருமி நீக்கம் அவசியம் குறித்து விரிவாக எடுத்துரைத்து, மருந்தடிப்பு செயல் விளக்கம் செய்து காண்பித்தார். மேலும் கூட்டத்தில் கலந்துகொண்ட விவசாயிகளுக்கு அட்மா திட்டத்தின் மூலம் கிருமி நாசினிகள் இலவசமாக வழங்கப்பட்டது.
இம்முகாமில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர். முகாமிற்கான

ஏற்பாடுகளை உதவி ஆய்வாளர் சேகர், இளநிலை ஆய்வாளர்கள் நஞ்சப்பா, தனஞ்செய்யன், ரவி, கிருஷ்ணன் ஆகியோர் செய்திருந்தனர்.

## அமராவதியில் தண்ணீர் திறக்க கரும்பு விவசாயிகள் கோரிக்கை

உடுமலை, : கரும்பு பயிர்களை காப்பாற்ற அமராவதி அணையில் இருந்து தண்ணீர் திறக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு பயிரிடுவோர் சங்கம் சார்பில், அதன் தலைவர் வேலுச்சாமி தமிழக முதல்வருக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறி இருப்பதாவது:

உடுமலை அமராவதி அணை மூலம் மடத்துக்குளம், தாராபுரம் தாலுகாக்களில் 26 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது. பெரும்பாலான விவசாயிகள் கரும்பு பயிரிட்டு, அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு சப்ளை செய்கின்றனர்.

கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் அணை நீர்மட்டம் குறைந்து, கடும் வறட்சி நிலவுகிறது. பொதுமக்களுக்கு மட்டுமின்றி, கால்நடைகளுக்கு கூட குடிநீர் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. ஆழ்குழாய் மூலமும் போதிய தண்ணீர் கிடைக்காததால், தென்னை, கரும்பு பயிர்கள் கருகுகின்றன.

தற்போது மடத்துக்குளம் பகுதியில் விவசாயிகள் கரும்பு நடவு செய்துள்ளனர். இதற்கு உயிர் தண்ணீர் அவசியம் தேவை. தாமதமானால் கட்டை கரும்பு கருகிவிடும். தற்போது தென்மேற்கு பருவமழையால் அணைக்கு தண்ணீர் வர துவங்கி உள்ளது. எனவே, கரும்பு பயிர்களை காப்பாற்ற அணையில் இருந்து 20 நாட்களுக்கு உடனடியாக தண்ணீர் திறந்து விட வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறியுள்ளார்.

## கம்பம் பள்ளத்தாக்கில் முதல்போக நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறக்க வலியுறுத்தல்

உத்தமபாளையம், : கம்பம் பள்ளத்தாக்கு பகுதியின் முதல்போக விவசாயத்திற்கு முல்லை பெரியாறு அணையில் இருந்து தண்ணீர் திறக்க வேண்டும் என தமிழக முதல்வருக்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கம்பம் பள்ளதாக்கில் கூடலூர் முதல் பழனிசெட்டிபட்டிவரை 14,707 ஏக்கர் பரப்பில் இரண்டு போகம் நெல் விவசாயம் நடக்கிறது. முல்லை பெரியாறு அணையின் நீர்மட்டம் 112 அடி இருந்தாலே நாற்றாங்காலுக்காக தண்ணீர் திறக்கலாம். ஆனால் கடந்த வருடம் போதிய மழை இல்லாததால் முதல்போக விவசாயம் கைவிடப்பட்டது. அதேபோன்று நிலைமை இந்த ஆண்டும் வந்துவிடக்கூடாது என்பதற்காக விவசாயிகள் கடந்த மாதம் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில், பெரியாறு அணையின் நீர்மட்டம் உயர்ந்தவுடன் தண்ணீர் திறக்க வேண்டும் என வலியுறுத்தினர். அதேநேரத்தில் தென்மேற்கு பருவமழையின் வேகம் எப்படி உள்ளது என்ற எதிர்பார்ப்புடனும் இருந்தனர். மழை தற்போது தொடர்ந்து பெய்து வருகிறது. இதனால் கடந்த 3 தினங்களில் அணையின் நீர்மட்டம் 3 அடி உயர்ந்துள்ளது. தற்போது அணையின் நீர்மட்டம் 115 அடியை தொட்டுவிட்டதால் நாற்றாங்கால் பாவுவதற்கு தண்ணீர் திறக்க கோரிக்கை விடுத்தனர். பெரியாறு அணையின் நீர்மட்ட உயரம் குறித்து தமிழக பொதுப்பணித்துறை அதிகாரிகள் தமிழக அரசிற்கு அறிக்கை அனுப்பி உள்ளனர். இந்நிலையில் கம்பம் பள்ளதாக்கு பெரியாறு ஆயக்கட்டு நீரினை பயன்படுத்துவோர் சங்கத்தின் ஆலோசனை கூட்டம் தலைவர் தர்வேஷ்மைதீன் தலைமையில் நடந்தது. நிர்வாகிகள் பொன்னுப்பிள்ளை, நாராயணன், ஜெயராமன், விஜயராஜன், பீர்முகமது, சகுபர்அலி, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இதனையடுத்து விவசாயிகள் சார்பாக தண்ணீர் திறக்க வலியுறுத்தி தமிழக முதல்வர் ஜெயலலிதாவிற்கு கோரிக்கை மனு அனுப்பப்பட்டுள்ளது. இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், ‘கம்பம் பள்ளதாக்கு பகுதி மக்களின் ஜீவாதாரமாக உள்ள முல்லை பெரியாறு அணையின் நீர்மட்டம் மழையின் காரணமாக உயர்ந்து வருவது மகிழ்ச்சியானது. சென்ற வருடம் விவசாயிகள் மழை இல்லாமல் பெரும் பாதிப்பை சந்தித்த னர். தற்போதைய சூழலில் பருவமழை பெருமளவு கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. எனவே முதல்போக விவசா யத்திற்கு தண்ணீர் திறக்க வேண்டும்‘, என்றனர்.

## தேனி மாவட்டத்தில் பரவலாக மழை; விவசாயிகள் மகிழ்ச்சி

தேனி, : தேனி மாவட்டத்தில் நேற்று பரவலாக மழை பெய்தது.

கேரள மாநிலத்தில் கடந்த சில தினங்களாக தென்மேற்கு பருவமழை பெய்து வருகிறது. கேரள மாநிலத்தின் எல்லையோரத்தில் தேனி மாவட்டம் உள்ளது. இதனால், தென்மேற்கு பருவமழை தேனியில் பெய்யும் என விவசாயிகள் எதிர்பார்த்து உள்ளனர். தேனி மாவட்டத்தில் மழை பெய்யாததால் அணைகளின் நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளது. மேலும் கண்மாய்களில் தண்ணீர் இல்லாமல் வறண்டு போயுள்ளது.

தேனி மாவட்டத்தின் பெரும்பகுதி ஆற்றின் நடுவே உறைகிணறு அமைத்து அங்கிருந்து கூட்டுக்குடிநீர் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

ஆற்றில் தண்ணீர் வரத்து இல்லாததால், உறைகிணறுகளிலும் ஊற்று கிடைக்காமல் தண்ணீர் விநியோகம் செய்வதில் பெரும் சிரமம் ஏற்பட்டு வந்தது.

இந்நிலையில் தென்மேற்கு பருவமழை கேரள மாநிலத்தில் பெய்வதால், தேனியிலும் மழை பெய்யும் என்ற எதிர்பார்ப்பு விவசாயிகள் மற்றும் பொதுமக்களிடையே நிலவி வருகிறது. நேற்று காலை முதலே மாவட்டம் முழுவதும் பரவலாக மந்த நிலை நிலவியது. இதனையடுத்து மதியம் பரவலாக சாரலுடன் கூடிய மழை பெய்தது.

இதனால் பூமி குளிர்ச்சி அடைந்தது. இம்மழையினால் மானாவாரி விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இம்மழை தொடர்ந்து பெய்வதால் தேனி மாவட்டத்தின் அணைகள் மற்றும் கண்மாய்களின் நீர்மட்டம் உயரும் என ஆவலில் விவசாயிகள் உள்ளனர்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் உயர்வு தடப்பள்ளி, அரக்கன்கோட்டைக்கு தண்ணீர் திறந்துவிட வேண்டும்

கோபி, : பவானிசாகர் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருவதால் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை மற்றும் காலிங்கராயன் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஈரோடு மாவட்டத்தின் முக்கிய நீராதாரமான பவானிசாகர் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளான அப்பர் பவானி, அவலாஞ்சி, குந்தா உள்ளிட்ட பகுதிகளில் பெய்யும் மழை நீரை பவானி சாகர் அணையில் 32 டி.எம்.சி. வரை தேக்கி வைக்கப்படுகிறது. பவானி சாகர் அணையில் இருந்து தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசன வாய்க்கால் மூலம் சுமார் 25 ஆயிரம் ஏக்கரும், காலிங்கராயன் பாசன வாய்க்கால் மூலம் சுமார் 15 ஆயிரம் ஏக்கரும், கீழ்பவானி வாய்க்கால் மூலம் கரூர் மாவட்டம் அஞ்சலூர் மங்கலப்பட்டி வரை சுமார் 2 லட்சம் ஏக்கரும் பாசன வசதி பெறுகின்றன.

ஆண்டுதோறும் தமிழகத்தில் முதல் போக சாகுபடிக்காக தடப்பள்ளி மற்றும் அரக்கன் கோட்டை வாய்க்காலில் ஏப்ரல் மாதம் 15ம் தேதி தண்ணீர் விடப்படுவது வழக்கம். ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக பவானி சாகர் அணையின் நீர்மட்டம் வெகுவாக குறைந்ததை தொடர்ந்தும், அதன் பின்னர் காவிரி நதி நீர் ஆணையத் தீர்ப்பின் காரணமாகவும் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்திற்கு தண்ணீர் விடவில்லை. இதனால் ஆண்டிற்கு சுமார் 25 லட்சம் குவின்டால் நெல் உற்பத்தி இழப்பு ஏற்பட்டது. இந்நிலையில் தமிழக அரசு தடப்பள்ளி அரக்கன்கோட்டை மற்றும் காலிங்கராயன் உள்ளிட்ட பழைய ஆயக்கட்டு பாசன வாய்க்கால்களுக்கு பழை முறைப்படியே இரண்டு போகமும் தண்ணீர் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. ஆனால் இந்த ஆண்டும் ஏப்ரல் மாதம் அணையில் போதிய நீர் இருப்பு இல்லாததால் தண்ணீர் விட வில்லை.

இந்நிலையில் தற்போது பவானி சாகர் அணையின் நீர் பிடிப்பு பகுதிகளில் ஓரளவு நல்ல மழை பெற்று வருவதால் அணையின் நீர் மட்டம் வெகுவாக உயர்ந்து வருகிறது. நேற்று மதியம் அணையின் நீர் மட்டம் 42 அடியாகவும் அதன் கொள்ளளவு 3.5 டி.எம்.சி.யாகவும் உள்ளது. அணைக்கு வரும் தண்ணீரின் அளவு வினாடிக்கு 5 ஆயிரம் கன அடியாக உள்ளது.

இதுகுறித்து தடப்பள்ளி அரக்கன்கோட்டை பாசன சங்க தலைவர் தளபதி கூறியதாவது: பவானிசாகர் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வரும் நிலையில் ஆற்றில் குடிநீருக்காக வழங்கும் 300 கன அடி தண்ணீருடன் கூடுதலாக 500 கன

அடி தண்ணீர் சேர்த்து 800 கன அடி தண்ணீர் வழங்கினால் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்திற்கு பயன்படுத்துவதுடன் மீதமுள்ள தண்ணீரை காலிங்கராயன் பாசனத்திற்கும் குடிநீருக்கும் வழங்க முடியும். தற்போது பருவமழை காலமாக இருப்பதால் குறைந்த தண்ணீரை வைத்து ஒருபோக சாகுபடி செய்ய முடியும். மேலும் ஆண்டுதோறும் ஏப்ரல் மாதம் தடப்பள்ளி அரக்கன்கோட்டை பாசனத்திற்கு தண்ணீர் வழங்கப்படும் போது ஈரோடு மாவட்டத்தின் பெரும்பகுதி ஈரப்பசையுடன் இருக்கும். அப்போது மழை மேகங்களை காற்றில் உள்ள ஈரப்பசை இழுத்து மழை அதிகளவு பெய்து வந்தது. அதே நேரத்தில் ஏப்ரல் மாதம் தண்ணீர் விடாத காலங்களில் பருவமழையின் அளவு கணிசமாக குறைந்தே உள்ளது. அதனால் அரசு தற்போதாவது தடப்பள்ளி, அரக்கன் கோட்டை மற்றும் காலிங்கராயன் பாசனத்திற்கு தண்ணீர் விட நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு சங்கத் தலைவர் தளபதி கூறினார்.

வறட்சி நிவாரணம் வழங்கியதில் பாரபட்சம் கலெக்டரிடம் விவசாயிகள் புகார்

ஈரோடு, : வறட்சி நிவாரணத்தை முறையாக வழங்கக்கோரி பாதிக்கப்பட்ட விவசாயிகள் நேற்று ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் மனு அளித்தனர்.
ஈரோடு மாவட்டம் கொடுமணல், ஒரத்துப்பாளையம் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் கொடுமணல் ஊராட்சி மன்ற தலைவர் செல்வராஜ் தலைமையில் கோரிக்கைகள் தொடர்பாக கலெக்டர் அலுவலகத்தில் நடந்த குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மனு அளித்தனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது: பெருந்துறை தாலுகா கொடுமணல், ஒரத்துப்பாளையம் ஆகிய பகுதிகளில் சுமார் 250 சிறு, குறு விவசாயிகள் இருந்து வருகிறோம். சுமார் ஆயிரம் ஏக்கர் நிலங்களும் உள்ளது. கடுமையான வறட்சியின் காரணமாக விவசாய நிலங்கள் காய்ந்து போய் நாங்கள் பாதிக்கப்பட்டு வருகிறோம். இந்நிலையில் தமிழக முதல்வர் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க உத்தரவிட்டுள்ளார்.
எங்கள் பகுதியில் வறட்சியால் பாதிக்கப்பட்ட நிலங்கள் குறித்து முறையாக ஆய்வு செய்யாமல் 150 பேருக்கு மட்டுமே வறட்சி நிவாரண தொகை வழங்கியுள்ளனர்.

இந்த தொகையும் குறைந்தபட்சமாக 500 ரூபாய் முதல் அதிகபட்சமாக 3 ஆயிரம் ரூபாய் வரை மட்டுமே வழங்கியுள்ளனர். 10 ஏக்கர் உள்ள ஒரு விவசாயிக்கு ஒரு ஏக்கர் மட்டுமே பாதிக்கப்பட்டுள்ளதாக கூறி நிவாரணம் வழங்குகிறார்கள். எங்கள் பகுதியைச் சேர்ந்த வருவாய் அதிகாரிகள் முறையாக ஆய்வு செய்யாமல் தன்னிச்சையாக பரிந்துரை செய்துள்ளனர். வறட்சியால் பாதிக்கப்பட்ட நிலங்கள் குறித்து உரிய மறுஆய்வு மேற்கொண்டு பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும். இவ்வாறு பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்தனர்.

ஸ்ரீ வாசவி கல்லூரி ஆய்வு  மாணவருக்கு டாக்டர் பட்டம்

ஈரோடு, : கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற விழாவில் ஈரோட்டைச் சேர்ந்த ஈரோடு ஸ்ரீ வாசவி கல்லூரியின் ஆய்வு மாணவரும், ஈரோடு மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு மையத்தின் இணைச்செயலாளருமான டாக்டர் ப.அய்யப்பனுக்கு வணிகத்துறையில் டாக்டர் பட்டத்தை கவர்னர் ரோசையா வழங்கி கௌரவித்தார். முனைவர் பட்டம் பெற்ற டாக்டர் அய்யப்பனை ஸ்ரீ வாசவி கல்லூரி முதல்வர் டாக்டர் ஜெய்சங்கர், வணிகத்துறை தலைவர் டாக்டர் ராமானுஜம், கல்லூரி இயக்குனர் பேராசிரியர் சிவக்குமார், ஈரோடு மாவட்ட ஈரோடு மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புமையத்தின் தலைவர் எஸ்கேஎம்.மயிலானந்தன், செயலாளர் பாலசுப்பிரமணியன் உட்பட பலரும் பாராட்டினர்.

## மஞ்சள் ஏலம் தள்ளிவைப்புக்கு விவசாயிகள் சங்கம் கண்டனம்

ஈரோடு, : மஞ்சள் ஏலத்தை ஒரு வாரகாலத்திற்கு தள்ளி வைத்திருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் மாவட்ட நிர்வாகம் உடனடியாக தலையிட்டு வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தமிழக விவசாயிகள் சங்கம் வலியுறுத்தி உள்ளது.

தமிழக விவசாயிகள் சங்கத்தின்(நாராயணசாமிநாயுடு பிரிவு) மாவட்ட நிர்வாக குழு கூட்டம் ஈரோட்டில் நடைபெற்றது.மாவட்டத் தலைவர் பெரியசாமி தலைமை தாங்கினார்.கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: தர்மபுரியில் நடைபெற உள்ள உழவர் தின தியாகிகள் பேரணியில் ஈரோடு மாவட்டத்தில் இருந்து திரளாக

கலந்து கொள்வது, ஈரோடு மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்த தமிழக அரசுக்கு நன்றி தெரிவிப்பது, வறட்சியை கருத்தில் கொண்டு கூட்டுறவு வங்கி, தேசிய வங்கிகளில் கடன் பெற்று உள்ள விவசாயிகளின் பயிர் கடன், நகை அடமான கடன், பத்திர கடன் உள்ளிட்ட விவசாயம் சார்ந்த கடன் நிலுவை தொகையினை மத்திய, மாநில அரசுகள் உடனடியாக தள்ளுபடி செய்ய வேண்டும். தனியார் மஞ்சள் கிடங்கு மற்றும் வியாபாரிகள் சங்கத்தினர் ஒரு வாரகாலத்திற்கு தன்னிச்சையாக ஏலத்தை நிறுத்தி வைத்திருப்பதை வன்மையாக கண்டிப்பது, இவ்விவகாரத்தில் மாவட்ட நிர்வாகம் உடனடியாக தலையிட்டு வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.கூட்டத்தில் செயலாளர் பெரியசாமி, திருமூர்த்தி, ஈஸ்வரன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.